
ISSN 1391-4006

# වාර්ෂික වාර්තාව
# ஆண்டறிக்கை
# ANNUAL REPORT
# 2011



ජාතික පුස්තකාල හා ප්‍රලේඛන සේවා මණ්ඩලය
(අධ්‍යාපන අමාත්‍යාංශය)

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை
(கல்வி அமைச்சு)

**NATIONAL LIBRARY AND DOCUMENTATION SERVICES BOARD**
**(Ministry of Education)**

අංක. 14
නිදහස් මාවත
කොළඹ 07

இல. 14
சுதந்திர வழி
கொழும்பு 07

No.14
Independence Avenue
Colombo 07

# ஆண்டறிக்கை

2011

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை
14. சுதந்திர வழி
கொழும்பு 07

# தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை

## ஆண்டறிக்கை 2011

(1998 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் நியதிகளுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டது)

### நிறுவனத்தின் நோக்கமும் குறிக்கோளும்

தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளுள் மனித அறிவை அபிவிருத்தி செய்தல் முக்கியமான தொரு விடயமாகும். பல்வேறு சமூகப் பிரிவுகளும் தமக்குத் தேவையான அறிவை விஞ்ஞான ரீதியில் ஒழுங்காகப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதே நாடெங்கும் பரந்துள்ள நூலகக் கட்டமைப்பின் அடிப்படைக் குறிக்கோளாகும். இலங்கையில் நூலக கட்டமைப்பை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் 1970 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கப் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபை தாபிக்கப்பட்டதுடன் அதன் சேவைகள் 1998 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினூடாக மேலும் விரிவு படுத்தப்பட்டுள்ளது.

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் செயற்பாடுகள் பிரதான இரு பிரிவுகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அவையாவன

- (அ) தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையத்தை நடைமுறைப் படுத்திச் செல்லுதல்.
- (ஆ) தேசிய மட்டத்தில் நூலக அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்தல்.

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையானது இலங்கையின் தேசிய நூலகமாக இருப்பதுடன், அது நாட்டில் உள்ள ஏனைய நூலகங்களின் தாய் நூலகமாகவும் செயற்படுகின்றது.
அதே போல தேசிய மட்டத்தில் நூலக அபிவிருத்திச் செயற் திட்டத்தின் கீழ் நூலகங்களுக்கான மதியுரை சேவைகளை வழங்குதல், நூலகத் துறையில் ஆராய்ச்சி மற்றும் மதிப்பாய்வுச் செயற்பாடு களை நடத்துதல், நூலக வளங்களைப் பெற்றுக் கொடுத்தல், நூற் கண்காட்சிகளை நடத்துதல், வாசிப்புப் பழக்கத்தை அபிவிருத்தி செய்யும் செயற் திட்டம், நூலகங்களைத் தரநிர்ணயம் செய்தல், நூலகத்துறை சார் விசேட தினங்களைக் கொண்டாடுதல், பல்வேறு அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட நூலகங்களை அபிவிருத்தி செய்தல், நூலகர்களைப் பயிற்றுவித்தல், நூலகக் கூட்டுறவுச் செயற்திட்டங்களை ஒழுங்குபடுத்துதலும் நூல் வெளியீட்டிற்கான உதவிகளை வழங்குதலும், போன்ற பல்வேறு செயற் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

1998 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவு (ஆ)வின் பிரகாரம் கௌரவ கல்வி அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபை 2011.12.31 ஆம் திகதி கீழ்க் காட்டப்பட்டுள்ளவாறு அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது.

(01) பேராசிரியர் திரு. சோமரத்ன பாலசூரிய - தலைவர்

### பதவி நிலை அங்கத்தவர்கள்

(02) திரு. பீ.பீ. அபேகோன் (செயலாளர், பொது நிருவாக சுதேச அலுவல்கள் அமைச்சு)
(03) திரு. எம். எஸ்.யு. அமரசிரி (தலைவர், இலங்கை நூலக சங்கம்)
(04) பேராசிரியர் திருமதி சிறிமலீ பிரனாந்து (தலைவர், தேசிய விஞ்ஞான மன்றம்)
(05) திரு. எச்.எம். குணசேகர (செயலாளர், கல்வி அமைச்சு)
(06) திரு. விமல் ரூபசிங்ஹ ( செயலாளர், கலாசார அலுவல்கள் மற்றும் மரபுரிமை தொடர்பான அமைச்சு)
(07) செல்வி. சீ. பெரேரா (அரச வரவு செலவுத் திணைக்களம்)
(08) பேராசிரியர் திரு. ஜீ.டபிள்யு. ஆபாசிங்க ( தலைவர், இலங்கை கணனி மற்றும் தகவல் தொழில்நுட்ப மன்றம்.

### ஏனைய அங்கத்தவர்கள்

(09) கலாநிதி திரு லீல் குணசேகர
(10) கலாநிதி திரு. கே. டீ. ஜீ. விமலரத்ன
(11) பேராசிரியர் திரு. ரோகண லக்ஸ்மன் பியதாச
(12) திரு. எச்.டீ பிரேமசிறி
(13) பேராசிரியர் திரு. பிரநீத் அபேசுந்தர

2010 மே மாதத்தில் இருந்து சபையின் தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகம் சேவையில் இருந்து விலகிக்கொண்டதுடன் 2010 டிசம்பர் மாதம் வரை தலைவர் உட்பட பணிப்பாளர் சபையானது

நியமிக்கப்படவில்லை. மீண்டும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தலைவர் உட்பட பணிப்பாளர் சபையானது 2011.09.01 ஆம் திகதியில் இருந்தே நியமிக்கப்பட்டது.

2011 ஆம் ஆண்டில் 04 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

**மதியுரைக் குழுக்கள்**

நிறுவனத்தின் ஒவ்வொரு பிரிவினதும் செயற்பாடுகள் தொடர்பாக மதியுரை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட மதியுரைக் குழுக்கள் இவ்வருடத்தில் நன்கு செயலாற்றியுள்ளன. அக் குழுக்களின் கூட்டங்கள் கீழே குறிபிடப்பட்டுள்ளவாறு நடத்தப்பட்டன.

(1) சேகரிப்பு அபிவிருத்தி கொள்கை மற்றும் நூற் சேகரிப்புக் கொள்கைகளை உருவாக்குவதற்கான குழு நூற்சேகரிப்பு பிரிவு) – 01 கூட்டம்

(2) வெளியீட்டு மதியுரைக் குழு (வெளியீடு மற்றும் நூல் அபிவிருத்திப் பிரிவு) – 04 கூட்டங்கள்

(3) அச்சீட்டு மதியுரைக் குழு (வெளியீடு மற்றும் நூல் அபிவிருத்திப் பிரிவு) – 02 கூட்டம்

(4) நூலகங்களைத் தரநிர்ணயம் செய்வதற்கான மதியுரைக்குழு (விரிவாக்கற் சேவைப் பிரிவு) - 01 கூட்டம்.

(5) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ( நிருவாகப் பிரிவு) - 01 கூட்டம்.

(6) ICH 02 செயற்பாட்டு கூட்டங்களும் 07 உப குழுக் கூட்டங்களும் நடத்தப்பட்டன.

**சேவையிலிருந்து ஓய்வுபெறல் :**

| பெயர் | பதவி | திகதி |
|---|---|---|
| திருமதி. ஜீ.எச். ஜராங்கனி | சுருக்கெழுத்தாளர் | (2011.01.22) |
| திரு. டீ. ஏ. தர்மசேன | நூலக உதவியாளர் I | (2011.03.09) |
| திரு. பீ. வீ. முனிதாச | நூலக சேவகர் | (2011.03.31) |

**சேவையிலிருந்து கேட்டு விலகுதல் :**

| | | |
|---|---|---|
| திருமதி. எம்..யு. ஐ. பெரேரா | நூலக உதவியாளர் II | (2011.01.31) |
| திரு. பீ. ஜீ. சிறிசேன | நூலக சேவகர் | (2011.03.28) |
| திரு. கே. கொட்டுவேகெதற | கணனி நிகழ்ச்சித்திட்டத் தயாரிப்பாளர் | (2011.05.03) |
| திருமதி. புஷ்பா சாந்தனி | நூலக சேவகர் | (2011.05.12) |
| திரு. ஏ. எஸ். ஹேவகே | பணிப்பாளர் நாயகம் | (2011.05.31) |
| செல்வி. ஏ.வீ.எம். கே. அங்கும்புற | உதவி நூலகர் | (2011.08.01) |
| திருமதி. சீதா கம்லத் | நூலக உதவியாளர் II | (2011.10.17) |
| செல்வி. ஓ.டீ. ஹப்பு ஆராச்சி | நூலக உதவியாளர் III | (2011.12.02) |
| திருமதி. லதிகா பிரியாங்கனீ | நூலக உதவியாளர் II I | (2011.12.14) |

2011.12.31 ஆம் திகதிய தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் அலுவலர் விபரம் கீழே காட்டப்பட்டுள்ளவாறாகும்.

| பதவி | சேவையில் ஈடுபட்டுள்ளோரின் எண்ணிக்கை | வெற்றிடம் |
|---|---|---|
| பணிப்பாளர் நாயகம் | - | 01 |
| பணிப்பாளர் (நிதி மற்றும் நிருவாகம்) | - | 01 |
| பணிப்பாளர் (தொழில்) | 02 | - |
| உதவிப் பணிப்பாளர்/ பிரதிப் பணிப்பாளர் (நிதி) | - | 01 |
| உதவிப் பணிப்பாளர்/ பிரதிப் பணிப்பாளர்(நிருவாகம்) | 01 | - |
| பிரதிப் பணிப்பாளர் (தொழில்) | 01 | 02 |
| உதவிப் பணிப்பாளர் | 01 | 08 |
| வலையமைப்பு முகாமையாளர் | - | 01 |
| உள்ளகக் கணக்காய்வாளர் | 01 | - |
| ஆவணம் பராமரிப்பாளர் | - | 01 |
| வெளியீட்டு அலுவலர் | 01 | - |
| தனிநபர் உதவியாளர் | - | 01 |
| நிருவாக அலுவலர் | - | 01 |

| | | |
|---|---|---|
| நூலக ஆவணவாக்கல் அலுவலர் | 07 | 02 |
| பேணல் அலுவலர் | 01 | - |
| ஆய்வு அலுவலர் | - | 01 |
| பிரித்து வழங்கல் அலுவலர் | - | 01 |
| விற்பனை அபிவிருத்தி அலுவலர் | - | 01 |
| பயிற்சி அளிக்கும் அலுவலர் | - | 01 |
| முறைமைப் பகுப்பாய்வாளர் | 01 | - |
| பராமரிப்பு அலுவலர் | 01 | - |
| நிதி அலுவலர் | 01 | - |
| நிதி உதவியாளர் | 01 | - |
| நூலக அபிவிருத்தி உதவியாளர் | 07 | 05 |
| தகவல் தொழில் நுட்ப உதவியாளர் | - | 01 |
| தகவல் உதவியாளர் | 34 | 16 |
| ஆவணமறுசீரமைப்பாளர் | - | 02 |
| முகாமைத்துவ உதவியாளர் (தொ.அ) | 25 | 11 |
| சாரதிகள் | 06 | - |
| மின் தொழில் நுட்பவியலாளர் | 01 | - |
| நூல் மட்டை கட்டுபவர்கள் | 03 | 03 |
| நூலக சேவகர்கள் | 21 | 08 |
| மொத்தம் | 123 | 75 |

**ஊழியர் பயிற்சி**

**உள்நாட்டுப் பயிற்சிகள் மற்றும் மாநாடுகள்**

(01) லலித் அத்துலத்முதலி தேசிய இளைஞர் சேவை மத்திய நிலையத்தினால் நடத்தப்பட்ட இணையத்தள உருவாக்கம் தொடர்பான டிப்ளோமாப் பாடநெறி 2011.- செல்வி கே. ஏன். சமந்தி- நூலக அபிவிருத்தி உதவியாளர்.

(02) Business English (Intermediate) பாட நெறியின் பொருட்டு 10 சபை ஊழியர்கள் பங்குபற்றினர்.

(03) உள்ளகக் கணக்காய்வில் வினைத் திறன் தொடர்பான மாநாடு 2011.08.20 ஆம் திகதி தொழில் நிபுணத்துவ அமைச்சின் திறன் அபிவிருத்தித் திணைக்களம் - திருமதி எம். ஐ. சித்திரா பத்மினி – உள்ளகக் கணக்காய்வாளர்.

(04) நிருவாக சட்ட திட்டங்கள் மற்றும் மனிதவள அபிவிருத்தி தொடர்பான மாநாடு 2011.09.06 ICTAD நிறுவனம். திருமதி டீ. ஆர். ஜயசிங்ஹ - பிரதிப் பணிப்பாளர் ( நிருவாகம்)

(05) நூலக சாதனங்களைப் பேணுதல் மற்றும் நூல் மட்டைகட்டுதல் தொடர்பான மூன்றுநாள் பாடநெறியொன்று 2011.11.28 ஆம் திகதி தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையில் நடத்தப்பட்டதுடன் இதில் 14 சபை ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

(06) ஆவண முகாமைத்துவம் தொடர்பான ஒருநாள் பயிற்சிப் பட்டறையொன்று 2011.11.24 ஆம் திகதி தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையில் நடத்தப்பட்டதுடன் இதில் 45 ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

(07) இலங்கைத நூலக சங்கத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த NACLIS -2011 மாநாடு- 2011.06.28 ஆம் திகதி நடத்தப்பட்டதுடன் அதில் திரு. டபிளிவ். சுனில், திருமதி சேனாநி பண்டார, திருமதி வருணி கங்கபட ஆராச்சி மற்றும் செல்வி சந்திமா வாதசிங்க ஆகிய 04 ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

(08) தகவல் தொழில் நுட்ப இயலுமையை அபிவிருத்தி செய்யும் பொருட்டான ஒரு நாட் பயிற்சிப் பட்டறை - இலங்கை நூலக சங்கம் 2011.12.16- திருமதி டபிளிவ் லக்ஷ்மி, திருமதி கே.ஜீ. சுதர்மா, திருமதி கே.ஏ. நில்மினி, செல்வி கே. என். சமந்தி மற்றும் திருமதி சிறீமா சூரியபண்டார ஆகிய 05 வர் பங்குபற்றினர்

**வெளிநாட்டுப் பயிற்சிகள்**

(1) 2011.04.02 – 2011.06.30 வரை தென்கொரியாவில் நடத்தப்பட்ட பேணல் விஞ்ஞானம் தொடர்பான ஆசியாவின் கூட்டுறவுச் செயற்திட்டத்தின் பொருட்டு ஆவணம் பேணுபவரான திரு. எல்.எம்.உதய பிரசாத் கப்ரால் பங்குபற்றினார்.

(2) ஆசியக் கடல் சார் பிராந்திய தேசிய நூலக பணிப்பாளர்களுக்கான வருடாந்த மாநாடு (CDNL – AO) 2011.04.16 – 19 வரை கொரியாவில் நடைபெற்றதுடன் அதில் பணிப்பாளர் நாயகம் திரு ஏ. எஸ். ஹேவகே கலந்துகொண்டார்.

(3) ISBN/ ISMN வருடாந்த மாநாடு 2011.09.13-17 வரை ஆபிரிக்காவில் நடத்தப்பட்டதுடன் அதில் வெளியீட்டு அலுவலர் திருமதி சிறீமா சூரியபண்டார கலந்துகொண்டார்.

(4) ஆசிய மற்றும் கடல்சார் பிராந்திய தொட்டுணரமுடியாத மரபுரிமை தொடர்பான வலையமைப்பு நிபுணர்களின் சர்வதேச மாநாடு 2011.11.28 இருந்து 2011.12.03 வரை கொரியாவில் நடத்தப்பட்டதுடன் அதில் பிரதிப் பணிப்பாளர் திரு டபிளிவ் சுனில் கலந்துகொண்டார்.

### நூலீட்டற் பிரிவு

தேசிய நூலகத்திற்குப் பொருத்தமான நூல்களையும் ஏனைய நூலக சாதனங்களையும் பெற்றுக் கொள்வதே நூலீட்டற் பிரிவின் பொறுப்பும் கடமையுமாகும். தேசிய நூலகத்தின் நூலீட்டற் கொள்கைக்கு ஏற்ப (i) இலங்கையில் வெளியிடப்படும் வெளியீடுகள் (ii) இலங்கை பற்றி வெளி நாடுகளில் வெளியிடப்படும் வெளியீடுகள் (iii) இலங்கையரால் வெளிநாடுகளில் வெளியிடப்படும் வெளியீடுகள் (iv) முக்கிய உசாத்துணை நூல்கள் (v) பிற நூலகங்களினால் பெற்றுக் கொள்ள முடியாததும் ஆனால் ஆராய்ச்சிச் செயற்பாடுகளுக்கு அவசியமானவையுமான உசாத்துணை நூல்கள் (vi) நூலக விஞ்ஞானத் தகவற் துறை தொடர்பான வெளியீடுகள் போன்றவற்றைக் கொள்வனவு செய்வதற்கு அதி முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. இதற்கும் மேலால் ISBN, ISSN மற்றும் ISMN இலக்கங்களைப் பெற்றுக் கொள்ளும் வெளியீட்டாளர் வைப்பிலிடும் பிரதிகளும் பெற்றுக் கொள்ளப்படுகின்றன. (i) பிரிவிற்குரிய நூல்களையும் நூலக தகவல் விஞ்ஞான துறைசார் வெளியீடுகளையும் கொள்வனவு செய்யும் போது 02 பிரதிகள் வீதமும், (ii) மற்றும் (iii) பிரிவுகளைச் சோர்ந்த வெளியீடுகளைக் கொள்வனவு செய்யும் போது 02 பிரதிகள் வீதமும், உசாத்துணை நூல்களில் ஒரு பிரதி வீதமும் பெற்றுக் கொள்ளப்படும். உசாத்துணை நூல்களைப் பெற்றுக் கொள்ளும் போது காலத்திற்கு ஏற்ற விதத்தில் இற்றைப் படுத்தப்பட்ட அவற்றின் புதிய பதிப்புக்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

### சட்டவைப்பு முறை

1885 ஆம் ஆண்டின் அச்சீட்டாளர் வெளியீட்டாளர் கட்டளைச் சட்டத்தில் 1976 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட திருத்தத்திற்கு அமைவாக, இலங்கையில் வெளியிடப்படும் சகல வெளியீடுகளினதும் பிரதி ஒன்று தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையத்திற்குச் சட்டரீதியில் உரித்துடையதாகின்றது. இச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனம் தேசிய சுவடிகள் கூடத் திணைக்களமாகும். அச்சீட்டாளர் மற்றும் வெளியீட்டாளர்களால் அந் நிறுவனத்தில் வைப்பிலிடப்படும் பிரதிகளுள் ஒரு பிரதி தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையத்திற்கு வழங்கப்படுகிறது. இவ் வருடத்தில் கட்டாய வைப்புச் சட்டத்தின் கீழ் 8709 நூல்களும் பிற வெளியீடுகளும், 12,337 புதினத்தாள்களும் தேசிய நூலகத்திற்குக் கிடைக்கப்பெற்றன.

### சர்வதேச நூற் பரிமாற்றச் சேவை

பல்வேறு வெளிநாட்டுத் தேசிய நூலகங்கள் மற்றும் ஏனைய பிரதான நூலகங்களுடன் பரிமாற்றத் தொடர்பினை ஏற்படுத்தி அதன் மூலம் நூலக சாதனங்களைப் பரிமாறிக் கொள்வது தேசிய நூலகச் சேகரிப்பை அபிவிருத்தி செய்வதற்கு உதவுகின்றது. 2011 ஆம் ஆண்டு சர்வதேச நூற் பரிமாற்றச் செயற்திட்டத்தின் கீழ் நூற்களைக் கொள்வனவு செய்வதற்காக சுமார் 1912.00 ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

### கொள்வனவு செய்தல்

தேசிய நூலகத்திற்குத் தேவையான வெளியீடுகளைப் பெற்றுக் கொள்ளும் பிரதான வழிகளுள் கொள்வனவும் ஒன்றாகும். உள்நாட்டு வெளியீடுகளைக் கொள்வனவு செய்யும் போது சட்டவைப்பு முறையின் கீழ் வராத வெளியீடுகள், கட்டாய வைப்புச் சட்டத்தின் கீழ் வைப்பிலிடப்பட வேண்டியிருந்தும் வைப்பிலிடப்படாத வெளியீகள் மற்றும் கட்டாய வைப்புச் சட்டத்தின் கீழ் கிடைக்கும் வெளியீடுகளினதும் மேலதிகப் பிரதிகள் போன்றன கொள்வனவு செய்யப்படுகின்றன. அதே போல வெளிநாட்டு வெளியீடுகளையும் முக்கிய உசாத்துணை நூல்களையும் கொள்வனவு செய்யும் போது உள் நாட்டு, வெளி நாட்டு நூல் விபரப்பட்டியல்கள், நூற் பட்டியல்கள், புதினத்தாள்கள், பருவ வெளியீடுகள், இணையம் போன்ற பல்வேறு மூல வளங்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன. (கொள்வனவுத் திட்டத்தின் கீழ் 2011 ஆம் ஆண்டில் தேசிய நூலகத்திற்காகக் கொள்வனவு செய்யப் பட்ட நூல்கள் மற்றும் ஏனைய சாதனங்களின் பெறுமதி ரூபா 3,442,065.00 ஆகும்.)

தேசிய நூலகத்தின் பொருட்டு இவ்வருடத்தில் 3786 நூல்களும், 16 பட்டப்பின் படிப்பு ஆய்வறிக்கைகளும் கொள்வனவு செய்யப்பட்டதுடன் 09 உள்நாட்டு பருவ வெளியீடுகளுக்கான சந்தாக்களும், 07 வெளிநாட்டு பருவ வெளியீடுகளுக்கான சந்தாக்களும், 02 இலத்திரனியல் உசாத்துணை மூலங்களுக்கான சந்தாக்களும் புதுப்பிக்கப்பட்டுள்ளன .

### அன்பளிப்புக்கள்

தேசிய நூலகத்தின் சேகரிப்பை அபிவிருத்தி செய்வதில் தனி நபர்களிடம் இருந்தும், பல்வேறு நிறுவனங்களிடமிருந்தும் கிடைக்கும் அன்பளிப்புக்கள் பெரிதும் உதவுகின்றன. 2011 ஆம் ஆண்டில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து 2089 வெளியீடுகள் அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்றுள்ளன. இவற்றுள் 1916 உள்நாட்டு வெளியீடுகளும் 173 வெளிநாட்டு வெளியீடுகளும் அடங்கும்.

### நிறுவனங்களுடனான அங்கத்துவத்தைப் புதுப்பித்தல்

சர்வதேச நூலக சங்கங்களின் சம்மேளனம் (IFLA) வின் அங்கத்துவம் புதுப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பொருட்டு ரூபா.64,000.00 செலுத்தப்பட்டுள்ளது. அதேபோல தேசிய பூகோள விஞ்ஞான சங்கம், CILIP நிறுவனம் மற்றும் இலங்கை வித்தியா அபிவித்திச் சங்கம் போன்ற உள்நாட்டு சங்கங்களின் அங்கத்துவங்களும் புதுப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதன்பொருட்டு ரூபா 88,400.00 செலுத்தப்பட்டது.

### வாசகர் சேவைப் பிரிவு

தேசிய நூலகத்தில் வைப்பிலிடப்பட்டுள்ள நூல்கள் மற்றும் ஏனைய நூலக சாதனங்களை வாசகர்கள் பரிசீலிப்பதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பது இப் பிரிவின் முக்கிய பொறுப்பாகும். கடந்த பல வருடங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து 2011 ஆம் ஆண்டில் தேசிய நூலக வாசகர் சேவைப் பிரிவின் மூலம் அதிகளவிலான வாசகர்களுக்கு சேவை வழங்கப்பட்டுள்ளது. இவ் வருடத்தில் தேசிய நூலகத்தின் சேகரிப்பைப் பரிசீலனை செய்தவர்களுள் முக்கியமானவர்களாக உயர் கல்வி நிறுவனங்கள் உட்பட பிற ஆராய்ச்சி நிறுவனங்களுடன் தொடர்புடைய ஆராய்ச்சியாளர்கள், பட்டப் பின் படிப்பு மற்றும் பட்டப் படிப்புப் பாட நெறிகளைப் பின்பற்றும் மாணவர்கள் உட்பட பல்வேறு மட்டத்தினரையும் குறிப்பிடலாம். அவர்களின் தேவைகளின் பொருட்டு மூன்று மாடிகளிலும் மூன்று பிரதான வாசிப்புக் கூடங்களும், விசேட தகவல் மேசை ஒன்றும் (Information Desk) வாசகர் சேவைப் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்கும் மேலால் கீழ் தளத்தில் உசாத்துணைச் சேகரிப்பு விரிவுபடுத்தப் பட்டுள்ளதுடன், இணைய சேவைகளை விரிவுபடுத்தும் நோக்கில் இணைய வசதிகளுடன் கூடிய 03 கணனிகள் பொருத்தப்பட்டு வாசகர்களுக்கு சௌகரியம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

### உசாத்துணை மற்றும் தகவல் வழங்கும் சேவை

இவ் வருடத்தில் தேசிய நூலகத்தின் பல்வேறு சேகரிப்புக்களில் இருந்தும் வாசகர்களுக்கு உசாத்துணை மற்றும் தகவல் சேவைகள் வழங்கப்பட்டுள்ளன. அதிகளவில் வாசகர்களினால் உபயோகப்படுத்தப்படும் சேகரிப்புக்களாக புதினத்தாட் சேகரிப்பு, பருவ வெளியீடுகளின் சேகரிப்பு, அரசாங்க வெளியீடுகளின் சேகரிப்பு, சட்டவைப்புச் சேகரிப்புப் போன்றனவற்றை இனங்காண முடியும். 2011 ஆம் ஆண்டில் 593 வாசகர்கள் நிரந்தர அங்கத்துவத்தையும் 9227 வாசகர்கள் குறுங்கால அங்கத்துவத்தினையும் பெற்றுள்ளனர். அங்கத்துவத்தினை புதுப்பித்த வாசகர்களின் எண்ணிக்கை 88 ஆகும். இலங்கையரல்லாத அங்கத்தவர்களின் எண்ணிக்கை 10 ஆகும். வாசிப்பு மாதத்தில் இலவசமாக அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்ட வாசகர்களின் எண்ணிக்கை1800 ஆகும். இதன் பிரகாரம் 2011.12.31 ஆம் திகதி மொத்த வாசகர் தொகை 11399 ஆகும். குறிப்பிட்ட வருடத்தில் 18,180 வாசகர்கள் தேசிய நூலகத்தை உபயோகப்படுத்தியுள்ளனர்.

### போட்டோப் பிரதிச் சேவை

தேசிய நூலகத்தின் பல்வேறு சேகரிப்புக்களில் உள்ள நூலக சாதனங்களிலிருந்து போட்டோப் பிரதிகளை வாசகர்களுக்கு வழங்குவதற்கு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வருடத்தில் 9358 வாசகர்களுக்கு 97,444 போட்டோப் பிரதிகள் வழங்கப்பட்டுள்ளன. இதன்பொருட்டு ரூபா 638,178.00 பெறப்பட்டுள்ளது.

### விசாரணைச் சேவை

பல்வேறு விடயங்கள் தொடர்பான தகவல்களைக் கேட்டுத் தனி நபர்களிடம் இருந்து வரும் விசாரணைகளுக்கு தகவல் வழங்குவது இப் பிரிவினால் வழங்கப்படும் சேவைகளுள் ஒன்றாகும். இதன் கீழ் கடித மூலமும், இலத்திரனியற் தபால் மூலமும், தொலைபேசியூடாகவும், நேரடியாகவும் வந்த 1966 விசாரணைகளுக்கு பதில் வழங்கப்பட்டுள்ளது.

### நூலக சேகரிப்பைப் பேணல் பாதுகாத்தற் செயற்பாடுகள்

நாள்தோறும் காற்றுக் குளிரூட்டியின் மூலம் வெப்பநிலை கட்டுப்படுத்தப்படுவதுடன், ஈரப்பதநிலைக் கட்டுப்பாட்டுக் கருவியின் மூலம் ஈரப்பதநிலை கட்டுப்படுத்தப்படுகின்றது. இதற்கும் மேலால் 418 நூல்களும், 18 வீடியோ நாடாகள் மற்றும் தேசப்படங்கள் பேணலிற்காக ஒப்படைக்கப் பட்டுள்ளன.

**இணையம் மற்றும் பல்லூடகச் சேவை**

மிகவும் பரந்தளவில் தகவல்களை வழங்கும் நோக்கத்துடன் வாசகர்களுக்கு இணையச் சேவை அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன், இவ்வருடத்தில் பெரும் தொகையான வாசகர்களுக்கு இதன் மூலம் சேவை வழங்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் 2011 ஆம் ஆண்டில் 167 வாசகர்கள் 181 மணித்தியாலம் 50 நிமிடங்களை தகவல் தேடலின்பொருட்டு இணையப் பாவனைக்காக உபயோகப் படுத்தியுள்ளனர். இதற்கும் மேலால் 23 வாசகர்கள் 33 மணித்தியாலம் 25 நிமிடத்தை Library and Information Science Abstract (LISA) ஐ பரிசீலனை செய்வதிலும் 14 வாசகர்கள் 17 மணித்தியாலம் 25 நிமிடங்களை விஞ்ஞான மேற்கோள்ச் சுட்டி (Science Citation Index) ஐ பரிசீலனை செய்வதற்கும் உபயோகப்படுத்தியுள்ளார்கள்.

**புதினத்தாள் வெட்டுத் துண்டுச் சேகரிப்பு**

பல்வேறுபட்ட 130 பொருட் தலைப்புக்களின் கீழ் 1300 புதினத்தாள் வெட்டுத் துண்டுகள் சேகரிக்கப் பட்டுள்ளன.

**நூலகங்களுக்கு இடையிலான நூல் இரவல் சேவை**

நூலக நூல்களை, இரவல் வழங்கும் செயற் திட்டத்தின் கீழ் நூல்களை வழங்கும் இச் செயற்திட்டம் 1990 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இவ் வருடத்திலும் பல பிரதான நூலகங்களுடன் இத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது. இதன் பிரகாரம் 2011 ஆம் ஆண்டில் 15 நிறுவனங்களுக்கு 19 நூல்கள் வழங்கப்பட்டுள்ளன.

**தேசிய நூலக நண்பர்கள் ஒழுங்கமைப்பு**

தேசிய நூலகத்தின் அபிவிருத்தியின் பொருட்டு ஆரம்பிக்கப்பட்ட " தேசிய நூலகத்தின் நண்பர்கள்" (Friends of National Library) ஒழுங்கமைப்புக் குழு இவ்வருடத்தில் 04 கூட்டங்களை நடத்தியதுடன் அதன் இரண்டாவது ஞாபகார்த்தவிழா 2011.09.05 ஆம் திகதி நடைபெற்றது..

**தகவல் தொழில் நுட்பப் பிரிவு**

இலங்கைத் தேசிய நூலகத்தில் கணனிச் சேவை மற்றும் தகவற் தொழில் நுட்பத்தை ஈடுபடுத்துவற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதுடன், இத்துறை தொடர்பாக தேசிய மட்டத்தில் மதியுரை சேவைகளை வழங்குவதும் இப்பிரிவின் முக்கிய பொறுப்பாகும். இவ்வருடத்தில் இப்பிரிவின் செயற்பாடுகள் மிகவும் பரந்த அளவில் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளன.

**தேசிய நூலகத்தின் இணையப்பக்கம்**

இதன் கீழ் www.natlib.lk என்னும் இணையப் பக்கத்தைத் தற்காலப்படுத்தும் செயற்பாடுகள் நடைபெற்றது.

**தேசிய நூலகத்தின் கணனிமயப்படுத்தப்பட்ட பட்டியல்**
**Alice for Windows புதிய மென் பாண்டத் தொகுதியை நடைமுறைப் படுத்திச் செல்தல்**

Alice for Windows மென் பாண்டத்தை நடைமுறைப்படுத்திச் செல்லுதலும் மற்றும் அதில் ஏற்படும் சிக்கல்களை நிவர்த்தி செய்தலும். இதன்பொருட்டு இந்த வருடத்தில் Softlink Asia Pvt.Ltd உடன் பராமரிப்பு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

**தேசிய நூலகத்தின் வெப் சேவர் (web server) மற்றும் மெயில் சேவரை (mail server) நடைமுறைப்படுத்திச் செல்தல்**

நிறுவனத்தின் வெப் சேவர் (web server) மற்றும் மெயில் சேவரை (mail server) நடைமுறைப்படுத்திச் செல்தல், பராமரித்தல் மற்றும் சிக்கல்களை சரிசெய்தல்.

**கணனிச் செயற் திட்டங்களைத் தொகுக்கும் செயற்பாடு**

இத் திட்டத்தின் கீழ், கீழ் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

- வெளியீடுகளில் வெளிவரும் பட்டிற் தரவுகளை (CIP) மற்றும் ISBN பெற்றுக் கொடுக்கும் பொருட்டு நிகழ்சித் திட்டங்களைத் தயாரித்தல்.

- நாட்டார் இலக்கியச் சேகரிப்பை இலக்கமயமாக்கல் (digitalize) செய்வதற்கான செயற் திட்டமொன்றைத் தயாரித்தல்.
- நாட்டார் இலக்கியம் தொடர்பான நூற்பட்டியலுக்கான தரவுத் தளம் ஒன்றைத் தயாரித்தல்.
- Cash Register ஒன்றைக் கொள்வனவு செய்வதற்காக தன்னியக்க தொகுதி ஒன்றை
- விதந்துரைத்தலும் அறிக்கையைப் பெற்றுக் கொடுத்தலும்.

## Pothgula ILS மென்பாண்டம் தயாரித்தல்.

இதைப் பாடசாலைகளில் உபயோகப்படுத்தும்போது முகம் கொடுக்கநேரிடும் சிக்கல்கள் தொடர்பாக கல்வி அமைச்சின் பாடசாலை நூலகப் பணிப்பாளருடன் கலந்துரையாடி உரிய விதந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. அதேபோல இந்த மென்பாண்டத்தை உபயோகப்படுத்தும் பாடசாலைகளில் Barcode Labels அச்சிடுவதற்குத் தேவையான அச்சு இயந்திரம் இல்லாத பாடசாலைகளுக்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

### கணனிக் கல்வி மற்றும் பயிற்சிச் செயற்பாடுகள்

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவினால் நடத்தப்படும் பயிற்சி நெறிகளின்போது தகவல் தொழில் நுட்பம் தொடர்பான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் கணனி மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் தொடர்பாக நூலகர்களை அறிவூட்டும் பொருட்டு விரிவுரைகளை நடத்துவதன் மூலம் உதவியளிக்கப்பட்டுள்ளது. இதற்கும் மேலால் மொணராகலை, புத்தளையில் நடத்தப்பட்ட நாட்டின் கிரீடம் கண்காட்சியின்போது இணையத் தேடுதல் மற்றும் மற்றும் அவற்றைப் பெற்றுக்கொள்ளுதல் பற்றி அறிவூட்டும் கண்காட்சிக் கூடங்களும் நடத்தப்பட்டது.

### நிறுவனத்தின் சகல பிரிவுகளினதும் கணனிச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல்.

புதிதாக 10 கணனிகளுடன் UPS இயந்திரங்களும் கொள்வனவு செய்யப்பட்டதுடன், அவை பிரிவுகளுக்கு பிரித்து வழங்கப்பட்டுள்ளது.

### தேசிய நூற்பட்டியற் கட்டுப்பாட்டுச் சேவைப் பிரிவு

தேசிய நூற்பட்டியற் கட்டுப்பாட்டுச் சேவைகள் பிரிவின் முக்கிய பொறுப்பு இலங்கைத் தேசிய நூற்பட்டியலைத் தொகுத்தலாகும். இப் பிரிவினால் தற்கால நூற்பட்டியல்கள், கடந்த கால தேசிய நூற்பட்டியல்கள், மற்றும் பல விசேட நூற்பட்டியல்கள் போன்றன தொகுக்கப்பட்டு வருகின்றன.

### இலங்கைத் தேசிய நூற் பட்டியல் 2011

இலங்கைத் தேசிய நூற்பட்டியலை தொகுத்து வெளியிடுவது தேசிய நூலகத்தின் முக்கிய பொறுப்புக்களுள் ஒன்றாகும். தேசிய நூற்பட்டியல் என்பது நாட்டினுள் வெளியிடப்படும் சகல வெளியீடு களினதும் தகவல்களை உள்ளடக்கிய ஒரு அதிகார பூர்வமான வெளியீடாகும். இச் செயற்பாட்டை தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை 1974 ஆம் ஆண்டில் இருந்து செய்து வருகின்றது. இச் செயற்பாடானது 1962 ஆம் ஆண்டில் இருந்து 1973 ஆம் ஆண்டு வரை தேசிய சுவடிகள் கூடத் திணைக்களத்தினால் செய்யப்பட்டு வந்தது.

இதன் பிரகாரம் இலங்கைத் தேசிய நூற்பட்டியலின் 2010 ஆம் ஆண்டு செப்டெம்பரில் இருந்து 2011 ஒக்ரோபர் வரையிலான மாதாந்த வெளியீடுகளை வெளியிடுதல் செவ்வனே நிறைவடைந்துள்ளதுடன் 14 தொகுதிகளையும் தொகுக்கும் செயற்பாடு நிறைவடைந்துள்ளது. இதற்கும் மேலால் தொடர்புடைய வெளியீடுகளுக்காகக் கிடைக்கப்பெற்ற சகல சிங்கள, தமிழ், ஆங்கில நூல்களும் பகுப்பாக்கம் செய்யப்பட்டு, பட்டியலாக்கம் செய்யப்பட்டு, பட்டியல் அட்டைகள் தட்டச்சிடப்பட்டு, தொகுப்பு வேலைகள் நிறைவேற்றப்பட்டதுடன் அதிகார பூர்வக் கோவை தொகுக்கும் வேலை மற்றும் கையெழுத்துப் பிரதிகளை தட்டச்சிடும் வேலைகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

### கடந்த கால இலங்கைத் தேசிய நூற்பட்டியல்

இலங்கையில் அச்சுக் கலை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டான 1737 ஆம் ஆண்டில் இருந்து தேசிய நூற்பட்டியல் தொகுக்க ஆரம்பிக்கப்பட்ட ஆண்டான 1963 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதிக்குரிய தேசிய நூற்பட்டியலைத் தொகுத்தல் இச் செயற்றிட்டத்தின் கீழ் நடைமுறைப் படுத்தப்படுகிறது. இதன் கீழ் 1901 -1940 காலப் பிரிவை உள்ளடக்கும் வகையில் தொகுக்கப்பட்ட தமிழ் வெளியீடுகளை உள்ளடக்கிய கையெழுத்துப் பிரதியின் தொகுப்பு வேலை நடைபெற்று வருவதுடன் 1941-1961 காலப்பிரிவிற்காகச் சேகரிக்கப்பட்ட தகவல்கள் செவ்வை பார்க்கப்பட்டு வருகின்றது.

### இலங்கை பருவெளியீட்டுக் கட்டுரைச் சுட்டி

இலங்கையில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் பருவ வெளியீடுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள கட்டுரைகள் தொடர்பான தகவல்களை வாசகர்கள் இலகுவாக தேடிக் கண்டு பிடிப்பதற்கு வசதியாக இச் சுட்டி தொகுக்கப்படுகின்றது. இது ஒரு காலாண்டு வெளியீடாகும். இவ் வருடத்தில் 2010 ஏப்ரல்- யூன், 2011 ஜனவரி-மார்ச் காலப்பகுதிக்கான 04 தொகுதிகளைத் தொகுக்கும் வேலை நிறைவடைந்து வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

### தேசிய நூலகத்தின் நூலக சாதனங்களைப் பட்டியலாக்கம் செய்தல்

தேசிய நூலகத்திற்காகப் பெற்றுக்- கொள்ளப்படும் சகல நூலக சாதனங்கள் தொடர்பாகவும் சரியான நூற்பட்டியலாக்கத் தகவல்களைக் கொண்ட பட்டியல் அட்டைகளைத் தயாரித்தலும், தேசிய நூலகத்தின் நூலகப் பட்டியலை நடைமுறைப்படுத்திச் செல்தலும் இப் பிரிவின் செயற்பாடுகளாகும். தேசிய நூலகத்தின் சேகரிப்புக்கள் தொடர்பான தகவல்களை வாசகர்கள் பெற்றுக் கொள்வதற்கான ஒரே வழி தேசிய நூலகப் பட்டியலாகும். ஆதலால் தேசிய நூலகத்தின் பட்டியலானது விஞ்ஞான பூர்வமானதாகவும், இலகுவாகத் தகவல்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய விதத்திலும் ஒழுங்கு படுத்தப்பட்டு வருகின்றது. தேசிய நூலகத்திற்காகப் பெறப்பட்ட நூலக சாதனங்களை சர்வதேச நியமங்களுக்கு அமைவாக பட்டியாலாக்கம் செய்து பகுப்பாக்கம் செய்து காங்கிரஸ் நூலக பொருட் தலைப்புக்கள் இடப்பட்டு கணனிமயப்படுத்தும் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றது.
2011 ஆம் ஆண்டின் இறுதியில் 9258 நூலக சாதனங்கள் கணனியில் உட்புகுத்தப் பட்டுள்ளன.

### அதிகார பூர்வ கோவையைத் தொகுத்தல்

நூலகங்களின் பட்டியலாக்கச் செயற்பாடுகளின் போது மிக அவசியமான இலங்கை நூல் ஆசிரியர்களின் பெயர்கள் தொடர்பான அதிகாரக் கோவை (Authority list of Authors ) ஒன்று இல்லாமல் இருப்பது இவ்வளவு காலமும் இந்நாட்டில் இருந்து வந்த பெரியதொரு குறைபாடாகும். நூல் ஆசிரியர் ஒருவரின் பெயர் பல்வேறு விதத்தில் வெளிவரும் சந்தர்ப்பங்களில் அந் நூலைப் பட்டியலாக்கம் செய்வதில் சிக்கல் ஏற்படுகின்றது. இச் சிக்கலைத் தவிர்ப்பதே நூல் ஆசிரியர் பெயர் அதிகாரபூர்வக் கோவையின் நோக்கமாகும். இதன் பிரகாரம் நூல் ஆசிரியர் அதிகாரக் கோவை (தமிழ்) யின் பிரதிகள் பல கல்விமான்களிடம் சமர்ப்பிக்கப்பட்டு அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அவை குழு அங்கத்தவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

### தேசிய ஒருங்கிணைந்த பட்டியலைத் தொகுத்தல்

தேசிய ஒருங்கிணைந்த பட்டியலைத் (National Union Catalogue) தொகுத்தல் மற்றும் அதை நடைமுறைப்படுத்திச் செல்தல் என்பன தேசிய நூலகத்திற்கு வழங்கப்பட்டுள்ள முக்கிய பொறுப்புக்களாகும். நாட்டின் ஏனைய நூலகங்களில் உள்ள நூல்கள் மற்றும் ஏனைய நூலக சாதனங்கள் தொடர்பான தகவல்கள் தேசிய நூலகத்தின் ஒருங்கிணைந்த பட்டியலில் உள்ளடக்கப் பட்டிருக்கவேண்டும். தேசிய நூலகத்திற்கு வருகை தரும் வாசகர்களுக்குத் தேவையான நூலக சாதனங்கள் தேசிய நூலகத்தில் இல்லாவிடில், அவை உள்ள நூலகங்கள் பற்றிய விபரங்களைத் தேசிய ஒருங்கிணைந்த பட்டியலில் இருந்து பெற்றுக் கொள்ள முடியும். இதைச் சபையின் இணையப் பக்கத்திலும் (home page) தேடுவதற்குரிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

### ஆவணவாக்கல் வளங்களை சேகரித்தல் தொடர்பான பயிற்சிப் பட்டறைகள்

இதன் கீழ் பயிற்சிப் பட்டறை ஒன்று 2011.09.16 ம் திகதி நடத்தப்பட்டதுடன் இதன் பொருட்டு வெளிக்கள மற்றும் உள்ளக ஊழியர்கள் 15 பேர் கலந்து கொண்டனர். அதனால் கிடைத்த வருமானம் ரூபா. 20,000.00 ஆவதுடன் செலவு ரூபா. 11,098.00 ஆகும்.

### தேசிய மட்டத்தினாலான நூற் பட்டியல்கள், சுட்டிகள் மற்றும் தகவற் கொத்துக்களைத் தொகுத்தல்

இவ்வருடதில் இலங்கை அரச வெளியீடுகளின் நூற் பட்டியலின் 2009- 2010 ஆம் ஆண்டுத் தொகுதிக்கான தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இலங்கை மாநாட்டுச் சுட்டி தொகுத்தலின் கீழ் தொடர்புபட்ட 2011 ஆண்டில் 417 நிறுவனங்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டில் தகவல்களைச் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### ஆய்வு அறிக்கைகள் தொடர்பான தரவுத்தளம்

இலங்கையின் ஆய்வு அறிக்கைள் தொடர்பான தரவுத் தளமொன்று உருவாக்கப்பட்டுள்ளதுடன் அதன் இரண்டாவது தொகுதி அச்சிடுதலுக்காக வெளியீட்டுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வருடத்தில் பட்டப் பின் படிப்பு ஆய்வுக் கட்டுரைகளின் சுட்டியின் 2001-2006 தொகுதி III

அச்சிடப்பட்டுள்ளது. 2007-2010 இன் பொருட்டு உள்ளடக்கப்பட்டுள்ள தரவுகளின் எண்ணிக்கை 1000 ஆகும்.

### இலங்கை புதினத்தாட் கட்டுரைச் சுட்டியைத் தொகுத்தல்

இதன் கீழ் குறிப்பிட்ட சுட்டியின் தரவுத் தளத்தின் பொருட்டு 2011 ஆம் ஆண்டில் சிங்கள மற்றும் ஆங்கில மொழிமூல புதினத்தாட் கட்டுரைச் சுட்டியினைத் தயாரிப்பதன் பொருட்டு 2080 தரவுகள் உட்புகுத்தப் பட்டுள்ளதுடன் 2010ம் ஆண்டின் தமிழ் தரவுத் தளத்தின் பொருட்டு தினகரன் புதினத்தாளில் இருந்து 632 பதிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### பேணல் மற்றும் புதுப்பித்தமைத்தற் பிரிவு

தேசிய நூலகத்தின் நூற் சேகரிப்பில் உள்ள நூலக சாதனங்களைப் பேணிப் பாதுகாத்தல் பேணற் பிரிவின் பொறுப்பாகும். இதன் கீழ் தேசிய நூலகத்தின் சேகரிப்பை பேணிப் பாதுகாப்பதன் பொருட்டு நிதமும் அவற்றை சுத்தம் செய்தல், புகையூட்டுதல், நூல் மட்டை கட்டுதல், திருத்தியமைத்தல் போன்ற செயற்பாடுகளுடன், தேசிய நூலகச் சேகரிப்பு உள்ள பிரதேசத்தில் காற்றுச் சீராக்கல், ஈரப்பதநிலைக் கட்டுப்பாடுக் கருவிகளைப் பொருத்துதல் போன்ற செயற்பாடுகளும் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

### நூல் மட்டை கட்டும் கூடம்

தேசிய நூலகத்தின் நூல்களை பாதுகாத்து மட்டை கட்டுதல் நூல் மட்டை கட்டும் பிரிவின் முக்கிய பொறுப்பாகும். இதன் பிரகாரம் நூல் மட்டை கட்டும் பிரிவினால் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

- 171,000 நூற்பட்டியல் அட்டைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.
- 347 சிறிய நூற்சேர்ப்பு இடாப்புக்கள் மட்டை கட்டப்பட்டுள்ளன.
- புதினத்தாள் சேகரிக்கும் பெட்டிகள் 288 தயாரிக்கப்பட்டுள்ளன.
- 35 மூடிய துண்டுப் பிரசுரப் பெட்டிகளும், 82 திறந்த துண்டுப் பிரசுரப் பெட்டிகளும் தயாரிக்கப் பட்டுள்ளன.
- நாட்டின் மகுடம் கண்காட்சியின் பொருட்டு கண்காட்சிப் பொருட்களைத் தயாரித்தல்

### தேசிய நூலக சேகரிப்பைப் பேணுதல் மற்றும் நன்கு நடைமுறைப்படுத்திச் செல்தல்

தேசிய நூலகச் சேகரிப்பைப் பேணிப் பாதுகாப்பதன் பொருட்டு நிதமும் அவற்றைச் சுத்தம் செய்தல், திருத்தியமைத்தல் போன்ற செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. நூற் சேகரிப்பு உள்ள பிரதேசம் காற்றுக் குளிரூட்டப்பட்டுள்ளதுடன் ஈரப்பதநிலைக் கட்டுப்பாட்டுக் கருவியும் பொருத்தப் பட்டுள்ளது. 58 VHS கசட் நாடாக்களுக்கு பூஞ்ஞனம் அகற்றப்பட்டு DVD களாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய சேகரிப்பின் பாதுகாப்பின் பொருட்டு விசேட ஒழுங்குகளும் செய்யப் பட்டுள்ளன. தேவையான சந்தர்ப்பங்களில் வாசகர் சேவைப் பிரிவின் பேணற் செயற்பாடுகளின் பொருட்டுத் தேவையான மதியுரைகளும் வழங்கப்பட்டுள்ளன. விசேடமாக மார்ட்டின் விக்கிரம சிங்ஹ சேகரிப்பில் ஏற்பட்ட பூச்சித்தாக்கம் பற்றி விஞ்ஞான ரீதியில் பரிசோதனை செய்யப்பட்டு சேகரிப்பை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### புகையூட்டல்

தேசிய நூலகத்தின் நூல்களைப் பேணும் பிரதான வழிகளில் ஒன்றாக அவற்றிக்குப் புகையூட்டப்பட்டு வருகின்றது. இத் திட்டத்தின் கீழ் இவ்வருடத்தில் 1052 நூல்களுக்கு பொஸ்பீன் புகையூட்டப் பட்டுள்ளது. இதற்கும் மேலால் இலங்கை மத்திய வங்கி நூலகத்தின் 66 நூல்களுக்கும் பண்டாரநாயக்க சர்வதேச கற்கை மத்திய நிலையத்தின் 295 நூல்களுக்கு மற்றும் 43 தனியார் நூல்களுக்கும் பொஸ்பீன் புகையூட்டப்பட்டுள்ளது. மேலும் தேசிய நூலகச் சேகரிப்பைச் சேர்ந்த 713 நூல்களுக்கு தைமோல் புகையூட்டப்பட்டுள்ளது.

### ஆவணங்களைப் புதுப்பித்தமைக்கும் பிரிவை நடைமுறைப் படுத்திச் செல்தல்.

இதன் கீழ் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் புதுப்பித்தமைத்தல் மற்றும் நூல்களுக்கு மட்டை கட்டும் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

- The Colombo Museum நூலின் 26 பக்கங்கள் அமில நீக்கம் செய்யப்பட்டு ரிசு ஒட்டப்பட்டுள்ளது
- "வினயட்ட கதா பொத்" இன் 231 பக்கங்கள் சுத்தம் செய்யப்பட்டு அமிலநீக்கம் செய்யப்பட்டதுடன் 184 பக்கங்களுக்கு ரிசு ஒட்டப்பட்டுள்ளது.

- The Legislative Enactments of Ceylon என்னும் நூலின் 329 பக்கங்கள் காயவைக்கப்பட்டு சுத்தமாக்கப்பட்டதுடன் 328 பக்கங்களுக்கு அமிலநீக்கம் செய்யப்பட்டு ரிசு ஒட்டப்பட்டுள்ளது.

- The Right Honorable என்னும் நூலின் 206 பக்கங்கள் சுத்தம் செய்யப் பட்டதுடன் 186 பக்கங்களுக்கு அமில நீக்கம் செய்யப்பட்டு, ரிசு ஒட்டப்பட்டுள்ளது.

- மாத்தளை நாடகம் நூலின் 508 பக்கங்கள் சுத்தம் செய்யப்பட்டதுடன் 518 பக்கங்களுக்கு அமில நீக்கம் செய்யப்பட்டு ரிசு ஒட்டப்பட்டுள்ளது.

- History of the Public Work என்னும் நூலின் 334 பக்கங்கள் சுத்தம் செய்யப்பட்டு 288 பக்கங்களுக்கு அமில நீக்கம் செய்யப்பட்டு ரிசு ஒட்டப்பட்டுள்ளது.

- Colonial Adversary Council of Agriculture என்னும் நூலின் 202 பக்கங்கள் சுத்தம் செய்யப்பட்டு 124 பக்கங்களுக்கு ரிசு ஒட்டப்பட்டது.

- Sanskrit English Dictionary நூலின் 394 பக்கங்கள் சுத்தம் செய்யப்பட்டு 405 பக்கங்கள் அமில நீக்கம் செய்யப்பட்டு ரிசு ஒட்டப்பட்டுள்ளது.

- The Indian Tobbaco duty 1910 இன் 360 பக்கங்கள் சுத்தம் செய்யப்பட்ட, 548 பக்கங்களுக்கு அமிலநீக்கம் செய்யப்பட்டு ரிசு ஒட்டப்பட்டுள்ளது.

- மாத்ய சித்தாந்த கௌமுதிய நூலின் 112 பக்கங்களுக்கு ரிசு ஒட்டப்பட்டஎ்ளது.

## MOW தேசிய குழு ( Memory of the world )

அருவ கலாசார மரபுகள் ( Intangible Cultural Heritage) தொடர்பான செயற்குழுவின் இரு கூட்டங்களும் மற்றும் ICH குழுவின் 07 கூட்டங்களும் நடத்தப்பட்டன. இதன்கீழ் The Field Survey of the ICH Safeguarding efforts in Sri Lanka மதிப்பாய்வு செய்யப்பட்டதுடன் அதன்பொருட்டு கொரியாவின் ஆசிய பசிபிக் பிராந்திய அருவ கலாசார மரபுகள் தொடர்பான மத்தியநிலையம் (ICHCAP) உதவி வழங்கியுள்ளது.

### பேரிடர் முகாமைத்துவ திட்டத்ததை தற்காலப்படுத்துதல்

இது தொடர்பான 02 குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இதன் கீழ் சபையின் சில ஊழியர்களுக்கு தீ அணைக்கும் சேவைத் திணைக்களத்தில் இருந்து பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதுடன். அவர்களை அவசர தீ அணைக்கும் பிரிவினராகவும் பெயரிடப்பட்டுள்ளது. மேலும் முதலுதவிக் குழு ஒன்றை தாபித்து அவர்களுக்கும் சாந்த ஜோன் அம்பியுலன்ஸ் சேவையினூடாக பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

### நூல் மட்டைகட்டும் சாதனங்களின் விற்பனை

30 தொகுதி நூல் மட்டை கட்டும் பொருட்களையும் 13 நூல் மட்டை கட்டும் உபகரணத் தொகுதிகளையும் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### நூலக ஆய்வுப் பிரிவு

இதன் கீழ் மாவட்ட மட்டத்தில் நூலகங்களை மதிப்பாய்வு செய்தல், நூலகத் துறை சார்ந்த செயற்பாடுகள் தொடர்பான புள்ளிவிபர ரீதியில் தகவல்களைச் சேகரித்தல், நூலக தகவல் விஞ்ஞான துறையில் தெரிவு செய்யப்பட்ட தலைப்புக்களின் கீழ் ஆய்வுகளை மேற்கொள்வதும் அவற்றை வெளியிடுவதும், நூலக செயற்பாடுகள் தொடர்பாக ஊடக தகவல்களை சேகரித்தல், மற்றும் ஆய்வு பயிற்சிப் பட்டறைகளை நடத்துதல் என்பன நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

### மாவட்ட மட்டத்தில் நூலக மதிப்பாய்வு

கொழும்பு, கம்பஹ மற்றும் களுத்துறை மாவட்டங்களில் உள்ள பொது நூலகங்கள் தொடர்பான தகவல்கள் தற்பொழுது சேகரிக்கப்பட்டுவருகின்றன

### நூலகத் துறை செயற்பாடுகள் தொடர்பாக புள்ளிவிபரத் தகவல்களைச் சேகரிததல்.

2010ம் வருடத்திற்குரிய தகவல்கள் தற்பொழுது சேகரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் உதவியுடன் தயாரிக்கப்பட்ட Statistical Handbook on Libraries in Sri Lanka – 2010 என்னும் தகவற் கொத்து அச்சில் உள்ளது.

## தெரிவுசெய்யப்பட்ட தலைப்புக்களின் கீழ் ஆய்வினை மேற்கொள்ளுதல்.

இதன்கீழ் தேசிய நூலக ஆவணவாக்கற் சேவைகள் சபையானது தற்பொழுது மேற்கொண்டுவரும் சேவைகளின் நிலைமை தொடர்பாக நூலகத் தொழில் சார்ந்தோரின் எண்ணக் கருத்துக்களை அறிந்துகொள்ளும் நோக்கத்துடன் ஆய்வு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## ஆய்வு பற்றிய பயிற்சிப் பட்டறைகளை ஒழுங்குசெய்தல்

நூலக ஆய்வு வழிமுறைகள் பற்றிய பயிற்சிப் பட்டறைகள் முறையே 2011.06.10 மற்றும் 2011.11.03 ம் திகதிகளில் நடத்தப்பட்டதுடன் இவற்றில் 44 பயிலுநர்கள் பங்குபற்றினர். இதன் மூலம் நிறுவனத்திற்கு கிடைத்த வருமானம் ரூ.5660/- ஆகும்.

## விரிவாக்கற் சேவைப் பிரிவு

நாட்டினுள் பரவி உள்ள பல்வேறுபட்ட நூலகங்கள் மற்றும் தேசிய மட்டத்தில் உள்ள நூலகங்களின் பொருட்டு மதியுரைசேவைகளையும் அபிவிருதிக்கான உதவிகளை வழங்குதல், மாகாண நூலக சேவைகள் சபை அபிவிருத்திச் செயற்திட்டம், நூலகங்களில் மதிப்பபாய்வுகளை நடத்துதல், வாசிப்பு பழக்கத்தை அபிவிருத்தி செய்வதற்கான செயற்திட்டம், நூலகத்துறை தொடர்பான விசேட தினங்களைக் கொண்டாடுதல், மற்றும் நல்ல நூலகத்தைத் தெரிவுசெய்தல் போன்ற பல்வேறுபட்ட செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதாகும்..

## தேசிய வாசிப்பு மாதம்

- 2010 ஆம் ஆண்டின் தேசிய வாசிப்பு மாதத்தின் பொருட்டு கிடைக்கப்பெற்ற 198 அறிக்கைகளை ஆய்வு செய்ததுடன் அவை மாவட்ட ரீதியில் கோவைப்படுத்தப் பட்டுள்ளன.
- 2011.11.04 ஆம் திகதி தேசிய விழாவானது சர்வதேச நிதித் தொடர்பு தொடர்பான சிரேட்ட அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம, மற்றும் கலாசார மற்றும் கலைச் செயற்பாடுகளுக்கான அமைச்சர் திரு.ரீ.பீ.ஏக்கநாயக்க அவர்களின் தலைமையின் கீழ், இலங்கை மன்றக் கல்லூரியில் நடத்தப்பட்டது. இவ்விழாவில் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மற்றும் விருந்தினர்கள் என சுமார் 500 பேர் பங்குபற்றினர்.
- இதற்கும் மேலால் விழாவிற்கு வருகை தந்திருந்த பரிசுபெற்ற சகல நூலகங்களுக்கும் ரூபா.7500/- பெறுமதியான நூல்களும் தேசிய பாடசாலைகளின் பொருட்டு ரூபா. 10,000/- பெறுமதியான நூல்களுமாக மொத்தம் 95 நூற்தொகுதிகள் வழங்கப்பட்டன.
- 2011 தேசிய வாசிப்பு மாதத்தின் பொருட்டு ஞாபகார்த்த மலர் ஒன்று தயாரிக்கப்பட்டதுடன் அதிகளவு பனர்களும் தயாரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டன.

## வாசிப்பு பழக்கத்தை அபிவிருத்தி செய்வதற்கான செயற்திட்டம்.

- இது தொடர்பான தரவுகள் கணனியில் உட்புகுத்தப்பட்டு வருகின்றது. 2011 ஆம் ஆண்டில் சுமார் 6000 தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளதுடன் அத்தரவுகளை ஆராய்ந்து பார்ப்பதன் பொருட்டு தொழில் நுட்பக் குழுவின் அங்கத்தவர் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## நூலகத் துறைசார் விசேட தினங்களை கொண்டாடுதல்

இதன் கீழ் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

1. உலக சிறுவர் புத்தகத் (ஏப்ரல் 02) தினத்தின் பொருட்டு வட மத்திய மற்றும் தென்மாகாண பாடசாலைச் சிறுவர்களிடையே ஆக்கப் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் அதன் பொருட்டு 200 ஆக்கங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.
2. பொது நூலக தினத்தைக் கொண்டாடு முகமாக அம்பாறை மாவட்டத்தில் விழாவொன்று எடுக்கப்பட்டதுடன் அவ்விழா 2011.07.18-19 ஆம் திகதிகளில் நடத்தப்பட்டது. இந் நிகழ்ச்சியில் 67 நூலகர்கள் கலந்துகொண்டதுடன் அந்த மாவட்டத்தைச் சேர்ந்த பொது நூலகங்களின் பொருட்டு சுமார் 04 இலட்சம் ரூபா பெறுமதியான நூல்கள் பிரித்து வழங்கப்பட்டன.

## தேசிய நூலக சட்ட வரைபுகள், விதிகள் மற்றும் சுற்று நிருபங்கள்

மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சில் நடைபெற்ற உள்ளுராட்சி நிறுவனங்களின் மாதாந்த அபிவிருத்தி மதிப்பாய்வுக் குழுக் கூட்டங்களில் பங்கேற்கப்பட்டது.

## நூல் உதவி வழங்கும் செயற் திட்டம்

நூலகச் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்யும் ஒரு முக்கிய வழியாக நூலகங்களுக்கு நூல் அன்பளிப்புச் செய்யும் செயற் திட்டத்தை தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் நடைமுறைப் படுத்தி வருகின்றது. இதன் பிரகாரம் இவ் வருடத்தில் 176 பாடசாலை நூலகங்களுக்கும், 42 பொது

சன நூலகங்களுக்கும், 19 பிரிவேனா மற்றும் தஹம் பாடசாலை நூலகங்களுக்கும், 05 பாதுகாப்புப் பிரிவு நூலகங்களுக்கும், 21 ஏனைய நூலகங்களுக்குமாக மொத்தம் 263 நூலகங்களுக்கு ரூபா 1,881,735.00 பெறுமதியான நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

### நூற் கண்காட்சி

2011 ஆம் ஆண்டில் 06 நூற் கண்காட்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. அவையாவன

1. நாட்டின் மகுடம் நூற் கண்காட்சி ஒன்று 2011.02.04 தொடக்கம் 10 வரை மொணராகலை மாவட்டத்தில் உள்ள புத்தளவில் நடைபெற்றதுடன் அதில் பங்குபற்றியமை.
2. சிங்கள தமிழ் புதுவருட நூற் கண்காட்சியொன்று 2011.04.06 தொடக்கம் 09 வரை தேசிய நூலகக் காணியில் நடத்தப்பட்டது.
3. போசன் விழாவின் நிமித்தம் மிஹிந்தலையில் 2011 06.11 தொடக்கம் 16 வரை நூற் கண்காட்சியொன்று நடத்தப்பட்டது.
4. கண்டி கன்டி சிற்றியில் 2011.06.30 தொடக்கம் 2011.07.03 வரை நூற் கண்காட்சியொன்று நடத்தப்பட்டது.
5. அரச சாகித்திய விழாவுடன் இணைந்து குருநாகலில் 2011.09.01 தொடக்கம் 12 வரை நடத்தப்பட்ட கண்காட்சியில் எங்கள் சபையினாலும் நூற் கண்காட்சியொன்று நடத்தப் பட்டது.
6. 2011 ஆகஸ்ற் 19-26 வரை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடத்தப்பட்ட சர்வதேச நூற் கண்காட்சியில் பங்குபற்றப்பட்டது.

07 இந் நூற் கண்காட்சிகளின் போது நூல் விற்பனையால் கிடைத்த வருமானம் ரூ.2,487,972.20 ஆகும்.

### நூலகங்களைத் தர நிர்ணயம் செய்தல்

இந் நிறுவனத்தின் முக்கிய செயற்பாடுகளுள் நூலகங்களைத் தரநிர்ணயம் செய்தலும் ஒன்றாகும். அதன் பிரகாரம் இவ் வருடத்தில் 04 நூலகங்கள் தரம் ஒன்றிற்கும் 06 நூலகங்கள் தரம் இரண்டிற்கும், 19 நூலகங்கள் தரம் மூன்றிற்கும் தரநிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. நூலகங்களைத் தரநிர்ணயம் செய்வதன் மூலம் ரூ. 72,000.00 வருமானமாகக் கிடைக்கப்பெற்றது.

### தேசிய நூலகத்தின் நூல் விற்பனைக் கூடம்

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் அநுசரனையுடன் வெளியிடப்படும் வெளியீடுகள், நூலாசிரிய வெளியீடுகள் மற்றும் சபையினால் வெளியிடப்படும் வெளியீடுகள் 40% கழிவுடன் தேசிய நூலகத்தின் நூல் விற்பனைக் கூடத்திற்கு விற்பனை செய்யப்படுகின்றன. இவ் வெளியீடுகள் நூலகங்களுக்கு விசேட சகாய விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. இதற்கும் மேலால் இவருடம் விசேட கழிவுடன் விற்பனை செய்வதற்காக வெளிக்கள நிறுவனங்களின் நூல்களும் தருவிக்கப்பட்டுள்ளன. தேசிய நூலகத்தின் நூல் விற்பனைக் கூடத்தின் மூலம் நூலகங்களுக்கு இலகுவாக, சகாய விலையில் நியமங்களுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட நூலக எழுது கருவிகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இவ்வருடத்தில் நூல் விற்பனைக் கூடத்தில் இருந்து கிடைத்த வருமானம் ரூ. 1,959,111.30 ஆகும்.

### சிறந்த நூலகம் ஒன்றைத் தெரிவுசெய்தல்

நாட்டில் சிறந்த பாடசாலை மற்றும் பொது நூலகங்களை தெரிவுசெய்யும் செயற்திட்டம் ஒன்று இவ்வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அதன்பொருட்டு மாநாடுகளை நடத்துதல் மற்றும் தொடர்புடைய துண்டுப்பிரசுரங்களை கடிதமூலம் அனுப்புதல் போன்ற ஆரம்பச் செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டள்ளன. இது தொடர்பாக வடக்கு மற்றும் கிழக்குமாகாணங்களில் உள்ள பாடசாலைகளின் பொருட்டு மாநாடு ஒன்று 2011.05.24 ஆம் திகதி நடத்தப்பட்டதுடன் அதில் 47 அலுவலர்கள் பங்குபற்றினர். வடமத்திய மாகாண பொதுசன நூலகங்களின் பொருட்டு 2011.06.07-08 ஆம் திகதிகளில் மாநாடு நடத்தப்பட்டதுடன் அதில் பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை 45 ஆகும்.

### கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் நோக்கம், நூலகர்களுக்கான குறுங்கால கல்வி மற்றும் பயிற்சிப் பாட நெறிகளை நடத்துவதன் மூலம் அவர்களுக்கு பரந்தளவிலான தொழிற் பயிற்சிகளை பெற்றுக் கொடுத்தலாகும். பொது, பாடசாலை, பிரிவேன, போன்ற பல்வேறு வகையான நூலகங்களைச் சேர்ந்த நூலகர்களின் பொருட்டு குறுங்கால நூலக விஞ்ஞான பாடநெறிகளை நடத்துதல், நூலக விஞ்ஞான மாநாடுகள் மற்றும் விரிவுரைகளை நடத்துதல் இப் பிரிவின் முக்கிய செயற்பாடுகளாகும

### பாடசாலை நூலகரின் பொருட்டு பயிற்சிப் பாடநெறிகள்/மாநாடுகள்

நாட்டில் பாடசாலை நூலகங்களின்பொருட்டு நிரந்தரமான தொழில்சார் நூலகர்கள் மிகக் குறைந்த அளவிலேயே இருப்பதனால் இப்பிரச்சினையை தீர்த்துவைப்பதன் பொருட்டு நூலகங்களுக்குப் பொறுப்பாக சேவையாற்றுவதற்கு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளாார்கள். இந்த ஆசிரியர்களுக்கு நூலக விஞ்ஞானம் பற்றிய அறிவைப் பெற்றுக் கொடுப்பதன் பொருட்டு தேசிய நூலக ஆவணவாக்கற் சேவைகள் சபையினால் பயிற்சிப் பாட நெறிகள் நடத்தப்படுகின்றன. அதன் பொருட்டு உதவி வழங்குவது கல்வி அமைச்சில் அந்தந்த மாகாணங்களுக்குப் பொறுப்பான பணிப்பாளர்களாகும். அதன் பிரகாரம் கீழே காட்டப்பட்டுள்ள பயிற்சிப் பாட நெறிகள் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தன.

01 ஹொறணைக் கோட்ட பாடசாலை நூலக அலுவலர்களைப் பயிற்றுவிக்கும் செயற்திட்டம் ஒன்று 2011.01.24-25 ஆம் திகதிகளில் தேசிய நூலக கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டதுடன் அதில் 45 பயிலுநர்கள் பங்குபற்றினர்.

02 மொனராகலை மாவட்ட பாடசாலை நூலக. அலுவலர்களைப் பயிற்றுவிக்கும் செயற்திட்டம் ஒன்று 2011.01.25- 26 ஆம் திகதிகளில் பிபில மற்றும் மொனராகலை பிரதேசங்களில் நடத்தப்பட்டதுடன் அதில் 104 பயிலுநர்கள் பங்குபற்றினர்.

03 ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை கல்விக் கோட்டத்தில் உள்ள நூலக அலுவலர்களைப் பயிற்றுவிக்கும் பயிற்சிப் பட்டறை ஒன்று 2011.04.28-29 ஆம் திகதிகளில் நடத்தப்பட்டதுடன் அதில் 39 பயிலுநர்கள் பங்குபற்றினர்.

04 நாட்டின் சகல கல்விக் கோட்டங்களின் பணிப்பாளர்களின் பொருட்டும் சிறந்த நூலகத்தைத் தெரிவுசெய்தல் தொடர்பான பயிற்சிப் பட்டறை ஒன்று 2011.05.24 ஆம் திகதி தேசிய நூலகத்தில் நடத்தப்பட்டதுடன் அதன்பொருட்டு 60 அலுவலர்கள் பங்கு பற்றினர்.

05 நீர்கொழும்பு கல்விக் கோட்ட பாடசாலை நூலக அலுவலர்களைப் பயிற்றுவிக்கும் பயிற்சிப் பட்டறை ஒன்று 2011.05.25 -26 ஆம் திகதிகளில் தேசிய நூலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் 50 பயிலுநர்கள் பங்குபற்றினர்.

06 கம்பளை கல்விக் கோட்டத்தில் உள்ள பாடசாலை நூலக அலுவலர்களை அறிவூட்டும் பயிற்சிப் பட்டறை ஒன்று 2011.06.22. ஆம் திகதி கம்பளை சஹிரா கல்லூரியில் நடத்தப்பட்டதுடன் அதில் 40 பயிலுநர்கள் பங்குபற்றினர்.

07 திருகோணமலை மாவட்ட பாடசாலை நூலகர்களைப் பயிற்றுவிக்கும் பயிற்சிப் பட்டறையொன்று 2011.06.27 மறற்று 28 ஆம் திகதிகளில் 'நடத்தப்பட்டதுடன் இதில் 110 பயிலுநர்கள் பங்குபற்றினர்.

08 கேகாலைக் கல்விக் கோட்டத்தில் பயிற்சிப் பட்டறையொன்று 2011.08.01 மற்றும் 02 ஆம் திகதிகளில் நடத்தப்பட்டதுடன் இதில் 75 பயிலுநர்கள் பங்குபற்றினர்.

09 வாசிப்பு மாதத்தின் பொருட்டு நூலகர்களுக்கான மாநாடு ஒன்று 2011.10.21 ஆம் திகதி நடத்தப்பட்டதுடன் இதில் 55 பயிலுநர்கள் பங்குபற்றினர்.

10 குருநாகல் மஹவ கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களின் பொருட்டு வாசிப்புப் பழக்கம் தொடர்பான மாநாடு ஒன்று 2011.11.11 ஆம் திகதி நக்வத்தாகம கனிஷ்ட வித்தியாலயத்தில் நடைபெற்றதுடன் இதில் சுமார் 250 மாணவர்கள் பங்கு பற்றினர்.

11 தெனுவர கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை நூலகர்களின் பொருட்டு மாநாடு ஒன்று கடுகண்ணாவ தேசிய பாடசாலையில் நடத்தப்பட்டதுடன் அதில் 77 பேர் பங்குபற்றினர்.

### பொதுநூலக அலுவலர்களின் பொருட்டான பாட நெறி

01. மொனராகலை மாவட்டத்தில் உள்ள பொது நூலக அலுவலர்களை பயிற்றுவிக்கும் பயிற்சிப் பட்டறையொன்று 2011.01.26 ஆம் திகதி மொனராகலை ஆசிரிய மத்திய நிலையத்தில் நடத்தப்பட்டதுடன் அதில் 27 பயிலுநர்கள் பங்குபற்றினர்.
02. மேல் மாகாணத்தில் நூலகர் தரம் மூன்றிற்கு ஆட்சேர்ப்பதன் பொருட்டு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சை தொடர்பாக அறிவூட்டும் மாநாடு ஒன்று 2011.01.27 மற்றும் 29 ஆம் திகதிகளில் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையில் நடத்தப்பட்டதுடன் அதில் 79 விண்ணப்பதாரிகள் பங்குபற்றினர். இதன் இரண்டாவது மாநாடு 2011.02.11 மற்றும் 25ம் திகதிகளில் நடத்தப்பட்டதுடன் இதில் 80 விண்ணப்பதாரர் பங்குபற்றினர்.
03. மேல் மாகாண நூலகர்களின் பொருட்டு சிறந்த நூலகத்தைத் தெரிவுசெய்வது தொடர்பான பயிற்சிப் பட்டறை மூன்று 2011 மார்ச் மாதத்தில் இந்த நிறுவனத்தில் நடத்தப்பட்டதுடன் இதில் 315 பயிலுனர்கள் பங்குபற்றினர்.
04. வாசிப்பு மாதம் தொடர்பாக 2011.10.25 ஆம் திகதி வட மாகாணத்தின் நூலகர்களின் பொருட்டு மாநாடு ஒன்று தேசிய நூலகத்தின் கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டதுடன் அதில் 40 பயிலுனர்கள் பங்குபற்றினர்.
05. நூல் மட்டை கட்டுதல் தொடர்பான ஒருநாள் பயிற்சிப் பட்டறை ஒன்று 2011.12.28 ஆம் திகதி ஜாஎல நகரசபையில் நடத்தப்பட்டதுடன் அதில் 24 பயிலுநர்கள் பங்குபற்றினர்.

### பிரிவேன நூலகர்களுக்கான பயிற்சிப் பாடநெறிகள்

2011.02.21 மற்றும் 22 ஆம் திகதிகளில் அம்பலாங்கொடை வேனமுல்ல பிக்கு பயிற்சி நிலையத்தில் பயிற்சிப் பட்டறை யொன்று பிரிவேனக்களின் நூலகங்களுக்குப் பொறுப்பானவர்களின் பொருட்டு நடத்தப்பட்டதுடன் இப்பயிற்சிப் பட்டறையில் 24 பிக்குமார்கள் கலந்துகொண்டனர்.

### சேவைக்காலப் பயிற்சிப் பாட நெறி

இதன் கீழ் பல்வேறு நிறுவனங்களின் நூலகங்களில் சேவையாற்றும் நூலகர்களின் பொருட்டு 04 பயிற்சிப் பாடநெறிகள், 2011.05.23 – 27, 2011.08.22-26, 2011.09.26-30, 2011.12.19-23 வரை நடத்தப்பட்டு சபையின் பல்வேறு பிரிவுகளிலும் ஈடுபடுத்தப்பட்டு அவர்களுக்கு செயல் ரீதியிலான பயிற்சி வழங்கப் பட்டுள்ளது. இதன் பொருட்டு 18 பயிலுநர்கள் பங்கு பற்றியிருந்ததுடன் அதன் மூலம் ரூபா 75,000.00/- கிடைக்கப் பெற்றது. அதேபோல மேலும் 01 பாடநெறி 2011.03.21 - 2011.04.11-21, வரை நடத்தப்பட்டதுடன் இதன்பொருட்டு 14 பயிலுனர்கள் பங்குபற்றினர். இது இலவசமாக நடத்தப்பட்டது.

### தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் (ICT) பயிற்சிப் பாடநெறி

தெரிவு செய்யப்பட்ட நூலக அலுவலர்களின் பொருட்டு இவ்வருடத்தினுள் 10 பாட நெறிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. இப்பாடநெறிகளில் 56 பயிலுனர்கள் பங்குபற்றினர். இதன்மூலம் பாடநெறிக் கட்டணமாக ரூபா. 196.000.00 அறவிடப்பட்டுள்ளது:

### நூலக சாதனங்களைப் பேணல் மற்றும் புதுப்பித்தமைத்தல் பாடநெறி, பயிற்சிப் பட்டறை மற்றும் மாநாடு

இதன் கீழ் நூலக சாதனங்களைப் பேணல் தொடர்பான பாடநெறியின் ஆரம்பக் கட்டப் பாடநெறி 01 2011.01.29-31 ஆம் திகதிகளில் மொணராகலை மாவட்டத்தில் பிபிலையில் நடத்தப்பட்டதுடன் இதில் 15 பயிலுநர்கள் பங்குபற்றினர்.
இரண்டாம் கட்டப் பாடநெறிகள் 04 முறையே 2011.02.23-25, 2011.05.30-31, 2011.08.03-05, 2011.09.12-13 ஆம் திகதிகளில் தேசிய நூலகத்தில் நடத்தப்பட்டதுடன் இப்பாட நெறிகளில் 46 பயிலுநர்கள் பங்குபற்றினர்.

### தேசிய நூலகத்தின் விரிவுரைத் தொடர்

இதன் கீழ் 2011 ஆம் ஆண்டில் 09 விரிவுரைகள் நடத்தப்பட்டன. அவற்றின் விபரம் கீழ்க் காட்டப் பட்டுள்ளவாறாகும்.

| | |
|---|---|
| (1). රසිකත්වය හා පෞරුෂත්වය | திரு. ஹசந்த ஹெட்டியாராச்சி (ஜனவரி 24) |
| (2) කාලගුණික අනතුරු ඇඟවීම් තේරුම් ගමු, භාවිත කරමු | திரு. எஸ்.ஆர். ஜயசேகர (பெப்ரவாரி 23) |
| (3) ස්වාභාවික විපත් හා ජගත් පාරිසරික අර්බුද හමුවේ ශ්‍රී ලංකාව | திரு. உதய கம்மன்பில (மார்ச் 29) |
| (4) ඉලෙක්ට්‍රොනික මාධ්‍ය භාවිතය හා බුද්ධිමය දේපල පිළිබඳ හිමිකම් නීතිය | கலாநிதி திரு. டீ.எம்.கருணாரத்ன ( ஏப்ரல் 28) |
| (5) ප්‍රජාතන්ත්‍රවාදී සමාජයක් උදෙසා මාධ්‍ය අධ්‍යාපනය | திரு. புந்துல பீ.தயாரத்ன (மே 25) |
| (6) වස විසෙන් තොර ආහාර නිෂ්පාදනය සඳහා ජාතික ප්‍රතිපත්තියකට මඟ | அத்துரலியே ரத்ன தேரர் (ஜுன் 24) |
| (7) බටහිර ලෝකයේ ග්‍රන්ථ ප්‍රකාශනයේ නව ප්‍රවණතා හා නිර්මාණය | திரு. பத்திரஜீ மஹிந்த ஜயதிலக (ஜுலை 27) |
| (8) දැයේ අස්පර්ශීය උරුමය සුරැකීම සඳහා ජාතික පුස්තකාලයේ වගකීම | திரு. புந்துல அந்தகம (ஆகஸ்ட் 29) |
| (9) ආශ්වාදය සඳහා කියවීම | பேராசிரியர் ஜே.பீ.திசாநாயக்க (ஒக்ரோபர் 20) |

## வெளியீடு மற்றும் நூல் அபிவிருத்திப் பிரிவு

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் வெளியீட்டு உதவிச் செயற் திட்டத்தை ஆரம்பித்து அதைக் கொண்டு நடத்துதல், தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் சகல வெளியீடுகளையும் வெளியிடுதல், சிறப்பு இலக்கிய நூல்களைத் தொகுத்தல், மொழிபெயர்த்து வெளியிடுதல் போன்றன வெளியீட்டுப் பிரிவின் முக்கிய செயற்பாடுகளாவதுடன், சர்வதேச நியம நூல், சஞ்சிகைகள், சங்கீத இலக்கத் திட்டங்களை நடைமுறைப்படுத்திச் செல்தல் போன்ற செயற்பாடுகள் இப்பிரிவினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

### வெளியீட்டு உதவிச் செயற்திட்டம்

நூல் வெளியீட்டு உதவிச் செயற்திட்டத்தின் கீழ் நூலாசிரியர்களுக்கு அவர்களின் கையெழுத்துப் பிரதிகளை அச்சிட்டு வெளியிடுவதற்கு உதவி வழங்கப்படுகிறது. அதற்கேற்ப 2011 ஆம் ஆண்டில் இச் செயற்திட்டத்தின்கீழ் அனுமதிபெற்ற கையெழுத்துப் பிரதிகளின் எண்ணிக்கை 13 ஆகும்.

| இல. | நூலாசிரியர் பெயர் | கையெழுத்துப்பிரதியின் பெயர் |
|---|---|---|
| 1 | திருமதி. புத்மினி உடிஸ்பத்துவ | සඳුන් සුවඳ |
| 2. | திரு.மொகான் சிறியாந்த ஆரியவங்ச | පරිසර අධ්‍යයනය හා සිංහරාජය ගවේෂණය |
| 3. | திரு. டீ. துசித்த மென்டிஸ் அசோக சிறிவர்த்தன | ශ්‍රී ලංකාවේ පුරාණ තාක්ෂණය හා සම්පත් පරිහරණය |
| 4. | திரு. புந்துல பீ. தயாரத்ன | පොඩියන් |
| 5. | திருமதி சிறீமா லாலனி | මයුර වාපා |
| 6. | திரு. டப்ளிவ்.எம்.ரீ.என். விக்கிரமசிங்ஹ | උදාතරි |
| 7. | திரு. லயனல் ராஜபக்ஸ | යක්ෂයාගේ හෝරාව |
| 8. | திரு. நவனலியே விஜேதுங்ஹ | අම්මාගේ ගුණ සුවඳ |
| 9. | திரு. ஆரியபால ரத்நாயக்க | මතක සිත්තම |
| 10. | திரு. லலித் குணவர்த்தன | ඩන්කන් වයිට |
| 11. | திரு. ஏச். சசந்த த சில்வா | ජාතික කතා හා සිංහල නාටකය |
| 12. | திரு. ஆனந்த அபேவிக்கிரம | මල් වැස්සක් |
| 13. | திருமதி. ஆர்.டீ.சாந்திலதா | අනුරාධපුර යුගයේ භික්ෂු විනය |

### அரச சன்மானம் பெற்ற நூல்களின் கொள்வனவு

இத் திட்டத்தின் கீழ் 2011 ஆம் அண்டில் 12 சிங்கள நூல்களும் 07 தமிழ் நூல்களும் 01 ஆங்கில நூலும் நூலாசிரியர்களிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

### சபையின் வெளியீடுகளை அச்சிடுதல் மற்றும் வெளியிடுதல்

2011 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட சபையின் வெளியீடுகள் கீழே காட்டப்பட்டுள்ளவாறாகும்.

01) பட்டப்பின் படிப்பு ஆய்வறிக்கைச் சுட்டி ( 2001 -2006 தொகுதி III (100 பிரதிகள்)
02) தேசிய நூலக பிரச்சார கையேடு ஆங்கில பிரதிகள் ( 1000 )
03) நிருவாக அறிக்கை – 2008 ( 400 பிரதிகள் )
04) நூலகச் செய்தி : 2010 ஜுலை – டிசம்பர் தொகுதி (350 பிரதிகள்)
05) இலங்கைப் பருவ வெளியீட்டுக் கட்டுரைச் சுட்டி – 2010/02.03,04 ( 50 பிரதிகள் வீதம்.)
06) இலங்கைத் தேசிய நூற்பட்டியல் - 2011/01-08 வரை ( 250 பிரதிகள் வீதம்)
07) Natnet Lanka செய்திப் பத்திரிகை: 2011 ஜனவரி-மார்ச்,ஏப்ரல், யூன்,ஜுலை,-செப்ரெம்பர் தொகுதி (350 பிரதிகள்)
08) அரச வெளியீடுகளின் பட்டியல் - 2008 (350 பிரதிகள்)
09) பண்டைய இலங்கையின் விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம் தொடர்பான நூற்பட்டியல் (100 பிரதிகள்)
10) நூலகங்கள் பற்றிய பட்டியல் (500 பிரதிகள்)
11) 2012-2014 காலத்திற்கான சுருக்க அபிவிருத்தி வரைபுத் திட்டம் (50 பிரதிகள்)

### சிறப்பிலக்கியங்களைத் தொகுத்தல்

பழைய சிறப்பிலக்கியங்களைத் தொகுத்தல், வெளியீட்டுப் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்படும் மிக முக்கிய செயற்திட்டமொன்றாகும். இதன் பிரகாரம் 2011 ஆம் ஆண்டில் புத்சரண நூலை பதிப் பிக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றது. இக் குழுவின் அங்கத்தவர்கள் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையின்படி அதன் 09 பதிப்பாசிரியர்களின் பொருட்டு ரூபா.38,000/- குறிப்பிட்ட

வருடத்தில் செலுத்தப்பட்டுள்ளது. 2011.11.30 ஆம் திகதி இந்த பதிப்பாசிரியர் குழுவை பணிப்பாளர் சபைக்கு அழைத்து தகவல்கள் விசாரிக்கப்பட்டள்ளது.

### சர்வதேச நியம நூல் இலக்கச் செயற் திட்டம் (ISBN)

சர்வதேச நியம நூல் இலக்கச் செயற் திட்டமானது வெளியீட்டுப் பிரிவனால் நடைமுறைப் படுத்தப்படும் மிக முக்கியமானதொரு செயற்திட்டமாகும். இலங்கையில் வெளியிடப்படும் சகல நூல்களுக்கும் ISBN இலக்கத்தினை வழங்குவதற்கு இங்கு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இவ்விதமான இலக்கங்களைப் பெற்றுக் கொள்ளும் வெளியீடுகள் தொடர்பான விபரங்கள் வெளியீட்டுப் பிரிவினால் பெரிய பிரித்தானியாவில் உள்ள சர்வதேச நியம நூல் இலக்கத் திட்டத்தின் தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்பி வைக்கப்படும். அங்கு குறிப்பிட்ட வெளியீடு தொடர்பான தகவல்கள் கணனி மற்றும் அச்சிட்ட ஊடகங்களின் மூலம் உலகெங்கும் பிரித்து வழங்கப்படும். 2011 ஆம் ஆண்டில் சர்வதேச நியம நூல் இலக்கத் திட்டத்தில் புதிதாக பதிவு செய்து கொண்ட வெளியீட்டாளர்களின் எண்ணிக்கை 1107 ஆகும். இந்த வருடத்தினுள் ISBN இலக்கங்களைப் பெற்று வெளியிடுவதற்குத் தயாராகியுள்ள நூல்களின் எண்ணிக்கை கீழ்க் காட்டப்பட்டுள்ளவாறாகும்.

| வெளியீட்டாளர் பிரிவு | நூற் தலைப்புக்களின் எண்ணிக்கை |
|---|---|
| வியாபார மட்டத்திலான வெளியீட்டாளர்கள் | 6759 |
| அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் வெளியீட்டாளர் | 1137 |
| ஆசிரிய வெளியீட்டாளர் / தனிநபர் வெளியீட்டாளர் | 2340 |
| மொத்தம் | 10236 |

2011 ஆம் ஆண்டு ISBN இலங்கங்களை வழங்கியதன் மூலம் வருமானமாக ரூ. 511,800.00 பெற்றுக் கொள்ளப்பட்டது..

### சர்வதேச நியம பருவ வெளியீடுகள் இலக்கத் திட்டம் (ISSN)

இச் செயற்திட்டமானது 1993 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இலங்கையில் வெளியிடப்படும் சகல பருவ வெளியீடுகளுக்கும் நியம இலக்கங்கள் வழங்கப்படுகின்றன. மேலே சர்வதேச நியம நூல் இலக்கச் செயற்த் திட்டத்தின் கீழ் நூல்களுக்கு வழங்கப்படும் சகல வரப்பிரசாதங்களும் வசதிகளும் இத்திட்டத்தின் கீழ் இலங்கையில் வெளியிடப்படும் பருவ வெளியீடுகளுக்கும் வழங்கப்படுகின்றது. இச் செயற்திட்டத்தின் சர்வதேச மத்திய நிலையமானது பிரான்சின் பரிஸ் நகரத்தில் அமைந்துள்ளது. 2011 ஆம் ஆண்டில் அரச மற்றும் அரச சார்பற்ற 217 பருவ வெளியீடுகளுக்கு ISSN இலக்கங்கள் வழங்கப்பட்டிருப்பதுடன் அதன் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| வெளியீட்டாளர் பிரிவு | நூற் தலைப்புக்களின் எண்ணிக்கை |
|---|---|
| வியாபார மட்டத்திலான வெளியீட்டாளர்கள் | 76 |
| அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் வெளியீட்டாளர் | 109 |
| ஆசிரிய / தனிநபர் வெளியீட்டாளர் | 32 |
| மொத்தம் | 217 |

2011 ஆம் ஆண்டில் ISSN இலக்கங்களை வழங்குவதற்கான கட்டணமாக ரூ. 10,850.00 பெற்றுக் கொள்ளப்பட்டது.

### சர்வதேச நியம சங்கீத இலக்கத் திட்டம் (ISMN)

சர்வதேச நியம சங்கீத இலக்கச் செயற்திட்டமானது வெளியீட்டுப் பிரிவினால் மேற் கொள்ளப்படும் மேலும் ஒரு செயற்திட்டமாகும். இவ் வருடத்தில் இச் செயற்திட்டத்தின் கீழ் 03 வெளியீட்டாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் வழங்கப்பட்ட ISMN இலக்கங்களின் எண்ணிக்கை 03 ஆகும். 2011 ஆம் ஆண்டு ISMN இலக்கங்களை வழங்கியதன் மூலம் ரூ.150.00 சேவைக் கட்டணமாக அறவிடப்பட்டது. அதன் விபரம் கீழ்க் காட்டப்பட்டுள்ளவாறாகும்.

| வெளியீட்டாளர் பிரிவு | நூற் தலைப்புக்களின் எண்ணிக்கை |
|---|---|
| ஆசிரிய / தனிநபர் வெளியீட்டாளர் | 03 |
| மொத்தம் | 03 |

## புதிய வெளியீடுகளைக் கொள்வனவு செய்தல்

இச் செயற்திட்டத்தின் கீழ் 2010 ஆம் ஆண்டில் 108 சிங்கள மொழிமூல நூல்களும் 07 தமிழ் மொழி மூல நூல்களும் 05 ஆங்கில மொழிமூல நூல்களும் அனுமதி பெற்றுள்ளன. 2011 ஆம் ஆண்டின் பொருட்டு இச்செயற்திட்டத்தின் கீழ் 244 சிங்கள மொழிமூல நூல்களும் 37 தமிழ் மொழிமூல நூல்களும் 14 ஆங்கில மொழிமூல நூல்களுமாக மொத்தம் 295 நூல்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## நூலகக் கூட்டுறவுப் பிரிவு

நூலகங்களுக்கான சட்டவரைபுகளை திருத்தியமைத்தல், சபையின் வெளியீடுகளைப் பிரித்து வழங்குதல், வாசகர் சமூகத்தை கட்டி எழுப்புதல், நூலகங்களிடையே பிரித்து வழங்குவதற்காக நூல் அன்பளிப்புக்களைப் பெறல், எழுத்தாளர் பெயர்ப் பட்டியலை தயாரித்தல், மற்றும் பல்வேறு நூலகங்களுக்கிடையே கூட்டுறவுச் செயற்திட்டங்களை ஒழுங்குபடுத்துதல் என்பன இந்தப் பிரிவின் முக்கிய செயற்பாடுகளாகும்.

- **நூலக சட்டவரைபுகளை திருத்தியமைத்தல்**

  இதன் கீழ் நூலகத் தறையில் உள்ள தொழிற் சங்கங்களின் பங்குபற்றுதலுடன் இணைந்த சேவைகள் பணிப்பாளர் (அரச நிருவாகம்) இடையிலான சந்திப்பொன்று 2011.03.11 ஆம் திகதி நடத்தப்பட்டது. அக்கூட்டத்தில் இத் திருத்தம் மற்றும் சேவைக்கால நியதிகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

- **நூலகச் செய்திச் சஞ்சிகையை வெளியிடுதல்**

  சபையினால் வெளியிடப்படும் நூலகச் செய்தி சஞ்சிகை 2010 ஜூலை – டிசம்பர் தொகுதிகளை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- **சபை வெளியீடுகளுக்கான பங்களிப்பு**

  2011 ஆண்டில் பருவவெளியீட்டுக் கட்டுரைச் சுட்டிக்காக பங்களிப்புச் செய்த நூலகங்களின் எண்ணிக்கை 26 ஆவதுடன் தேசிய நூற்பட்டியல்களுக்கு பங்களிப்புச் செய்த நூலகங்களின் எண்ணிக்கை 73 ஆகும்.

## தந்திரோபாய திட்டமிடற் பிரிவு

சபையின் சகல பிரிவுகளினதும் செயற்பாடுகளைத் திட்டமிடல், மேற்பார்வை செய்தல் மற்றும் தொடர்புபடுத்தல் என்பன தந்திரோபாய திட்டமிடற் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கும் மேலால் நிருவாகச் செயற்பாடுகளை ஒழுங்காக நடைமுறைப்படுத்திச் செல்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் இப்பிரிவின் பொறுப்பாகும்.

சபையின் பல்வேறு பிரிவுகளின் வருடாந்த, அரைவருட மற்றும் மாதாந்த அபிவிருத்தி அறிக்கைகளை நடைமுறைப்படுத்திச் செல்தல், பணிப்பாளர் சபையின் 04 கூட்டங்களை ஒழுங்குசெய்தமை, மாதாந்த அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டங்களை நடத்துதல்.

2008 நிருவாக அறிக்கையைத் தயாரித்தல், தொடர்புடைய முக்கிய தரவுகளையும் புள்ளி விபரங்களையும் சேகரித்தல், சபை அலுவலர்களின் வெளிநாட்டுப் பயிற்சிச் செயற்பாடுகள், நிறுவனத்தின் குறுங்கால, நீண்டகாலத் திட்டங்களைத் தயாரித்தல், பல்வேறுபட்ட விசாரணைகளுக்கான பதில்களை வழங்குதல், சபையின் பல்வேறு செயற் திட்டங்களை நடைமுறைப் படுத்துதல் தொடர்பான மேற்பார்வைச் செயற்பாடுகள், 2012 ஆம் ஆண்டிற்கான வருடாந்தச் செயற் திட்டத்தைத் தயாரிப்பதற்காக அதற்கான அடிப்படைத் திட்டத்தைத் தயாரித்தல் போன்ற செயற்பாடுகள், நிறுவனத்தின் தூர நோக்கு மற்றும் சேவைகளை நிகழ்காலத்திற்குப் பொருத்தமான விதத்தில் திருத்தியமைத்து அதன் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. வடகிழக்கு விசேட நூலக அபிவிருத்தி செயற்திட்டம் தொடர்பான அறிக்கை தயாரித்தல் போன்றனவும் இவ்வருடத்தில் நிறைவு செய்யப்பட்டன. இதற்கும் மேலால் சபையின் பல்வேறு செயற் திட்டங்கள் தொடர்பாக புள்ளிவிபரத் தரவுகளை நடைமுறைப் படுத்திச் செல்தலும் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

## நிருவாகப் பிரிவு

இவ்வருடத்தில் நிறுவனத்தின் சம்பள மறுசீராக்கச் செயற்பாடுகள், புதிய ஆட்சேர்ப்புக்களுக்குத் தேவையான அடிப்படைச் செயற்பாடுகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. ஆட்சேர்ப்புத் திட்டத்தை ஒழுங்குசெய்தல், வருடாந்த இருப்பெடுப்புச் செயற்பாடுகள், இடர் கடன், துவிசக்கரவண்டிக் கடன், சம்பள அதிகரிப்புக்களைப் பெற்றுக்கொடுத்தல், பல்வேறு பிரிவுகளின் தேவைகளுக்கு ஏற்ப வாகனங்களை

வழங்குதல் போன்றன நிறைவேற்றப்பட்டன. நிதிச் சலுகை வரி முறையின்கீழ் PC 3588 டபிள் கப் வாகனம் ஒன்றும் இவ்வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்டது. இதற்கும் மேலால் புகையிரத பருவகாலச் சீட்டைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தல், பாதுகாப்புச் சேவை தொடர்பான செயற்பாடுகள், வெளிநாட்டுப் பொதிகளை விடுவித்தல், நலம்பேணற் செயற்பாடுகளின் பொருட்டு தேவையான நிதிகளைப் பெற்றுக்கொடுத்தல், பல்வேறு சந்தர்ப்பங்களின் நூற் தொகுதிகளை வழங்குதல், விடுப்பு ஏடுகளைத் தற்காலப்படுத்திச் செல்தல். சாதாரண/ பதிவுத் தபால்களையும் பார்சல் தபால்களையும் அனுப்புதல் மற்றும் மறு சீரமைப்பு வேலைகள் போன்றன சேவைகளை இவ்வருடத்தில் இருந்து நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் அதன் கீழ் நூலக ஆய்வு மற்றும் நூலகக் கூட்டுறவு என இரு பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கும் மேலால் ஆவணவாக்கற் சேவைப் பிரிவை நீக்கிவிட்டு அச்சேவையை நூற்பட்டியற் கட்டுப்பாட்டுச் சேவையுடன் இணைத்துள்ளதுடன் நூலக அபிவிருத்திப் பிரிவானது விரிவாக்கற் சேவை என மாற்றப்பட்டுள்ளது.

### கட்டுமானம் மற்றும் பராமரிப்புச் செயற்பாடுகள்

2011 ஆம் ஆண்டில் மத்தியப்படுத்தப்பட்ட காற்றுக் குளிரூட்டியின் திருத்தச் செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டு குறிப்பிட்ட சேவைச் செயற்பாடுகளின் பொருட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் கட்டிடத்தின் ஏனைய பொருத்துதல்களான பாரம் தூக்கி மற்றும் தீ அபாய சமிஞ்ஞைக் கருவித் தொகுதியின் பொருட்டு 2011 ஆம் ஆண்டில் சேவை ஒப்பந்தங்களில் கையொப்பமிடப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் செயற்படவும், இதற்கும் மேலால் காற்றுக் குளிரூட்டித் தொகுதி மற்றும் மின்சாரத் தொகுதி மற்றும் புதுப்பித்தமைத்தற் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டன.

2011 ஆம் ஆண்டின் பொருட்டு புதிய நலம்பேணற் சேவை நிறுவனம் ஒன்றை தெரிவு செய்வதற்குத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இச் செயற்பாடுகளுக்கு மேலால் நாளாந்த அலுவலகச் செயற்பாடுகளின் பொருட்டு கணனி, தட்டச்சு இயந்திரம், மற்றும் போட்டோப்பிரதி இயந்திரம் போன்றன, தொடர்புடைய பிரதிநிதிகளின் ஊடாக தேவையான விதத்தில் சேவை செய்யப்பட்டு புதுப்பித்தற் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சபைக் காணியின் பராமரிப்பு வேலைகளை செவ்வனே செய்து முடிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.சபையின் உள்ளக நடைபாதைத் தொகுதியின் ஒரு பகுதிக்கு காப்பெற் போடப்பட்டுள்ளது. கட்டிடத்திற்குப் பூச்சுப் பூசப்பட்டு யன்னல்களுக்கு புதிய திரைச்சீலைகள் இடப்பட்டு, நீர்ப்பாதைகளையும், ஒப்பனைக் கூடங்களையும் புதுப்பித்தமைத்தல், தேவைக்கேற்ப பிரிவுகளில் தேவையான இடங்களைப் பிரித்துப் பாட்டிசன் செய்யப்பட்டுள்ளது. 2011 ஆண்டில் நிறுவனத்தின் கேட்போர் கூடம் மற்றும் மாநாட்டு மண்டபத்தினை வாடகைக்கு விட்டதன் மூலம் ரூ. 1,137,100.00 சபைக்கு கிடைத்துள்ளது.

### கணக்கு மற்றும் கொடுப்பனவுச் செயற்பாடுகள்

இவ்வருடத்தினுள் 2011 ஆம் ஆண்டிற்குரிய வரவு செலவு ஏட்டை கல்வி அமைச்சின் செயலாளருக்குச் சமர்ப்பித்து அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், மாதாந்தம் தயாரிக்கப்படும் நிதி முன் அறிக்கைகள் மற்றும் வரவு செலவு விபரங்களை உள்ளடக்கி அமைச்சின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டதுடன் திறைசேரியில் இருந்து கிடைக்கவேண்டிய பணத்தைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு பணக் கொடுக்கல் வாங்கல் விபரங்களை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்ட நிதி முன் அறிக்கையை அமைச்சின் செயலாளரின் ஊடாக வரவுசெலவுப் பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கும் மேலால் சபையின் கொடுக்கல் வாங்கல், காசுப்புத்தகம் என்பன கணனி மயப்படுத்தப் பட்டுள்ளதுடன் மாதாந்த அறிக்கை மற்றும் இறுதிக் கணக்கு அறிக்கையைத் தயாரிப்பதில் இலகு தன்மையை ஏற்படுத்துவதற்காக பகுப்பாய்வு அறிக்கை ஒன்று தயாரிக்கப் பட்டுள்ளது. திறைசேரியில் இருந்து மீண்டுவரும் செலவினத்திற்காக பெற்றுக்கொண்ட பணம் மற்றும் சபையினால் உழைக்கப்பட்டு வரவு செலவுத் திட்டத்திற்கு அமைவாக கொடுப்பனவு செய்வதற்காக உபயோகிக்கப்பட்டதுடன், அரசாங்க கணக்காய்வுப் பிரிவில் இருந்து கிடைத்த கணக்காய்வு தொடர்பான வினாக்களுக்கு விடையளித்தல், சகல வங்கி கணக்குகளுடனும் தொடர்புடைய வரவு செலவுக் கணக்குகள் மற்றும் கணக்குப் புத்தகத்தை மாதாந்தம் தற்காலப் படுத்திக் கொண்டு நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
காசுப் புத்தகம் இற்றைப்படுத்தப்பட்டு வந்ததுடன் ஊழியர் சம்பளம், மேலதிக, பிரயாண மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் போன்றவற்றை கொடுப்பதற்கான செயற்பாடுகள் குறிப்பிட்ட தினங்களில் மேற்கொள்ளப்பட்டது. மீள்வரும் செலவிற்காக திறைசேரியில் இருந்து கிடைக்க வேண்டிய பணத்தை நேரகாலத்தில் பெற்றுக் கொள்ள முடியாமல் போனதுடன் சபையினால் உழைக்கப்பட்ட பணமும் வரவு செலவு வரையறைகளுக்கு உட்பட்டு கொடுப்பனவுகளுக்காக செலவு செய்யப்பட்டுள்ளது.

வரவு செலவு தொடர்பான விபரங்கள் உள்ளடங்கிய நிதி மதிப்பீட்டு அறிக்கையை ஒழுங்கு செய்து, அதை அமைச்சின் செயலாளரின் ஊடாக அரசாங்க வியாபார திணைக்களத்திற்கு மாதந் தோறும் சமர்ப்பித்து திறைசேரியில் இருந்து கிடைக்கவேண்டிய பணத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சபைக்குக் கிடைக்கும் ஏனைய வருமானங்களைச் சரியான முறையில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல், மாதாந்த கணக்கு அறிக்கைகள் சரியான முறையில் தயாரிக்கப்பட்டு குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு சமர்ப்பித்து கல்வி அமைச்சு அறிந்து கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கும் மேலால் வரவு செலவு காசுப் புத்தகம் என்பனவற்றை கணனி

மயப்படுத்தப்படுவதுடன் அந்த விபரங்களின் அடிப்படையில் வங்கியிணக்கக் கூற்று அறிக்கை மற்றும் இறுதிக் கணக்குகள் இற்றைப் படுத்தப்படு வதுடன் அத் தகவல்கள் ஊடாக வங்கிக்கணக்கிணக்கக் கூற்று அறிக்கை மற்றும் இறுதிக் கணக்கு கோப்பு என்பன தற்காலப்படுத்தப்படுகின்றன.

இந்த வருடத்திற்குரிய மாதாந்த சம்பள அறிக்கைகளை தயாரித்தல், ஊழியர் சேம இலாப நிதியம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், மற்றும் சட்டபூர்வமான குறைத்தலுக்கான தவணைக் கட்டணங்களை செலுத்தும் செயற்பாடுகள், தேய்மான ஏடுகளைத் தயாரித்தல், கடன் ஏடுகளைத் தற்காலப்படுத்தல், 2010 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளின் மாதிரியைத் தயாரித்தல், தேவையான சம்பள விபரங்கள், பிணை வைப்பு மற்றும் ஏனைய தகவல்களை வழங்குதல், சம்பள மறுசீரமைப்புத் தொடர்பாக தேவையான மாதிரிப் படிவங்கள், பரீட்சை விதிகள் மற்றும் ஏனைய அறிக்கைகளைத் தயாரித்தல், 2010 ஆம் ஆண்டிற்கான ஊழியர் சேம இலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் அரையாண்டு அறிக்கைகளைத் தயாரித்து இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பிவைக்கும் செயற்பாடுகள் இதன்கீழ் செய்து முடிக்கப்பட்டன. இதற்கும் மேலால் சபையின் தேவைக்கு ஏற்ப எழுது கருவிகளை வழங்குதல் விற்பனைக் கூடத்திற்குத் தேவையான பொருட்களை வழங்குதல், நூல் மட்டை கட்டும் கூடத்திற்கு தேவையான உபகரணங்களையும் இரசாயணப் பொருட்களையும் வழங்குதல் 20 கணனிகள் மற்றும் 01 Computer serve, PC 3588 கப் வாகனத்திற்கு கனபி ஒன்றைப் பொருத்தியமை, றிசோகிராப் இயந்திரத்திற்குத் தேவையான மாஸ்ரர் றோல், மை றியூப், UPS 20 மற்றும் LCD 40" ஒளிபரப்பு இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்தல் போன்ற செயற்பாடுகளும் இந்த வருடத்தில் செய்து முடிக்கப்பட்டன.

முடிவுரை

தேசிய முக்கியத்துவம் பெற்ற தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினால் 2011 ஆம் ஆண்டிலும் இந்நாட்டு நூலக அமைப்பிற்கும், வாசகர்களுக்கு விசேட சேவைகளை வழங்குவதற்கு கிடைத்தமை மிகவும் சந்தோஷத்திற்குரிய விடயமாகும். இதன் பிரகாரம் மேலே காட்டப்பட்டுள்ள தகவல்களை ஆராய்ந்து பார்க்குமிடத்து தெளிவாகும் விடயம் என்னவெனில் இலங்கையில் நூலக அமைப்பின் அபிவிருத்திக்கும் அவற்றைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்திச் செல்வதற்கும் வேண்டிய பாரிய அளவிலான செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு எமது நிறுவனத்திற்குச் சாத்தியமாகியுள்ளது. அதன் மூலம் இந்நாட்டில் உள்ள சகல இனப் பிரிவினர்களினதும் நூலகப் பாவனை தொடர்பான ஆவலை அபிவிருத்தி செய்யும் நோக்கம் பாரிய அளவில் நிறைவு செய்யப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் கடந்த ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட தேசிய செயற் திட்டத்தின் மூலம் வாசகர்களிடையே வாசிப்பைப் பழக்கப்படுத்துவதற்கும், நூலக சேவைகள் மற்றும் வெளியீட்டுத் துறையிலான செயற்பாடுகளின் பொருட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும், நூலகத் துறை சார் கல்விமான்கள், மற்றும் மாவட்ட மட்டத்தில் நூலகங்களையும் ஊழியர்களையும் மதிப்பாய்விற் குட்படுத்துவதற்கும் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபைக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது முக்கியமானதொரு விடயமாகும். தேசிய வாசிப்பு மாதம் மற்றும் ஏனைய நூலகத் துறை சார் முக்கிய தினங்களின் போது பல்வேறு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் யுத்தத்தினால் அழிந்துபோன நூலகங்களை மீண்டும் மீளக் கட்டி யெழுப்புவதற்கும் தேவையான தகவல்களை சேகரித்தல் போன்ற செயற்பாடுகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இப்படிப்பட்ட செயற் திட்டங்களின் மூலம் நூலக வசதிகளைக் கட்டி யெழுப்புவதற்காக வழங்கப்பட்ட நிதி உதவி, பொருள் உதவி மற்றும் மதியுரை சேவை என்பனவற்றின் மூலம் சாதகமான பலாபலன்களை அடைவதற்குச் சாத்தியமானது.

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் செயற்பாடுகளை 2011 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டதிற்கு ஏற்ப நன்கு செய்து முடிப்பதற்கு இயலாமற் போனதற்கான காரணம் பணிப்பாளர் சபை ஒன்று இல்லாமையேயாகும். எனினும் வருட இறுதியில் 2011.09.01 ஆம் திகதியிலிருந்து டிசம்பர் மாதம் வரை கிடைத்த உதவிக்கு எனது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், கல்வி அமைச்சின் கௌரவ அமைச்சரிடம் இருந்தும், அவ் அமைச்சின் செயலாளரிடம் இருந்தும், கௌரவ பிரதிக் கல்வி அமைச்சரிடமிருந்தும் கிடைத்த உதவிக்கு எனது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதே போல பல்வேறு சிக்கல்கள் மற்றும் நிதிக் கஷ்டங்கள் இருந்த போதும் நிறுவனத்தினால் 2011 ஆம் ஆண்டின் பொருட்டு திட்டமிடப்பட்டிருந்த செயற்பாடுகளில் பலவற்றை வருட இறுதியில் கெட்டித்தனமாக செய்து முடிப்பதற்கும், அவற்றை உயர் தரத்தில் கொண்டு நடத்துவதற்கும் பிரிவுத் தலைவர்கள் உட்பட சகல அலுவலர்களும் அளித்த உதவிக்கு இங்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இந்த அறிக்கையை ஒழுங்குபடுத்துவதில் எமக்கு உதவி செய்ய அலுவர்களுக்கும் இறுதியாக மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

என்.எச்.எம் சித்ரானந்த — பணிப்பாளர் நாயகம் (பதில் கடமை)

பேராசிரியர் சோமரத்ன பாலசூரிய — தலைவர்

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை
இல.14,
சுதந்திர மாவத்தை
கொழும்பு 07ள

# தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை

## நிதி அறிக்கை – 2011

**கல்விச் சேவைகள் அமைச்சு**

(இந்த வருடாந்த கணக்கு அறிக்கை அனுமதி பெற்றவுடன் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையானது கல்விச் சேவைகள் அமைச்சுக்கே உரித்தானது.)

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை
2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் இருந்தவாறான நிதிநிலை அறிக்கை

| | | 31.12.2011 | 31.12.2010 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| ***நடப்புச் சொத்துக்கள்*** | குறிப்பு | ரூ. சதம். | ரூ. சதம் |
| காசும் காசுச் சமானங்களும் | 1 | 752,487.07 | 4,489.923.74 |
| பெற்றுக்கொள்ள வேண்டியவை | 2 | 16,406,939.31 | 16,745,121.93 |
| தொக்குகள் | 3 | 19,649,228.31 | 14,803,392.75 |
| முற் கொடுப்பனவுகள் | 4 | 702,825.44 | 392,275.05 |
| வைப்புக்கள் | 5 | 392,464.29 | 380,424.63 |
| | | 37,903,944.42 | 36,811,138.10 |
| ***நடப்புச் சொத்துக்கள் அல்லாதவை*** | | | |
| உட்கட்டமைப்பு,இயந்திரங்களும் உபகரணங்களும் | 6 | 26,914,841.92 | 19,012,555.78 |
| காணியும் கட்டிடமும் | 7 | 40,188,778.64 | 41,244,515.10 |
| ஏனைய நிதிசாராச் சொத்துக்கள் | 8 | 39,259,421.58 | 40,241,253.14 |
| | | 106,363,042.14 | 100,498,324.02 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | 144,266,986.56 | 137,309,462.12 |
| **பொறுப்புக்கள்** | | | |
| ***நடைமுறைப் பொறுப்புக்கள்*** | | | |
| கொடுக்கவேண்டியவை | 9 | 1,034,212.14 | 1,033,003.67 |
| திரண்ட செலவுகள் | 10 | 1,766,782.26 | 1,821,408.00 |
| ஊழியர் சலுகைகள் | 11 | 158,166.32 | 153,707.05 |
| ஏனைய நடைமுறைப் பொறுப்புக்கள் | 12 | 839,597.85 | 902,026.44 |
| | | 3,798,758.57 | 3,916,170.01 |
| ***நடைமுறைப் பொறுப்புக்கள் அல்லாதவை*** | | | |
| பணிக்காலக் கொடைக்கான ஒதுக்கம் | | 24,329,668.83 | 18,334,585.00 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | 28,128,427.40 | 22,250,755.01 |
| **தேறிய சொத்துக்கள்** | | 116,138,559.16 | 115,058,707.11 |
| **தேறிய சொத்துக்கள் / உரிமங்கள்** | | | |
| மூலதனம் / வேறு வழிகளில் கிடைத்த கொடைகள் | 13 | 72,454.15 | 5,184,329.97 |
| ஒதுக்கங்கள் | 14 | 13,920,422.69 | 12,683,621.81 |
| திரண்ட மிகைகள் / (குறைபாடு) | 15 | 102,145,682.32 | 97,190,755.33 |
| மொத்த தேறிய சொத்துக்கள் / உரிமங்கள் | | 116,138,559.16 | 115,058,707.11 |

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கைப் பொதுத்துறைக் கணக்கியல் நியமங்களின் தேவைக்கு அமைவாக (SLPSAS) தயாரிக்கப்பட்டதாகும்

ஒப்பம்

தலைவர்- நிதிப்பிரிவு

இந் நிதி அறிக்கையை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பிலான சகலவிடயங்களுக்கும் சபையின் பணிப்பாளர் சபை பொறுப்பாவதுடன் பணிப்பாளர் சபையின் பொருட்டு பின்வருவோர் ஒப்பமிட்டுள்ளனர்.

ஒப்பம் ------------------------------------ ஒப்பம் ------------------------------------

தலைவர் — பணிப்பாளர் நாயகம் (வே.மே)

தேநூஆசேச — தேநூஆசேச

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை
நிதிச் செயற்பாட்டு அறிக்கை
2011 டிசம்பர் 31ம் திகதி நிறைவடைந்த ஆண்டிற்கானது

| | | 21.12.2011 | 31.12.2010 |
|---|---|---|---|
| | | ரு. ச. | ரு.ச. |
| **வருமானம்** | குறிப்பு | | |
| கேட்போர் கூட வாடகை | | 1,137,450.00 | 925,050.00 |
| நூலக எழுதுகருவிகளின் விற்பனை | | 1,277,733.90 | 1,334,360.35 |
| நூல் விற்பனையால் கிடைத்த இலாபம் | | 1,194,270.13 | 235,120.40 |
| கட்டணங்கள்,தண்டப் பணங்கள், அபராதங்கள் | 16 | 931,850.00 | 696,935.00 |
| வட்டி வருமானங்கள் | 17 | 682,184.84 | 734,258.72 |
| வெளியீடுகளுக்கான சந்தாப்பணம் | 18 | 285,525.75 | 306,812.72 |
| நிருவாகச் செலவிற்கான அரச கொடை | | 63,170,000.00 | 64,5000.000.00 |
| ஏனைய வருமானங்கள் | 19 | 1,076,325.92 | 2,643,129.37 |
| | | 69,755,340.54 | 71,375,666.56 |
| **செலவுகள்** | | | |
| நூலக சேவைச் செலவுகள் | 20 | 7,448,668.46 | 6,953,185.73 |
| நிருவாக மற்றும் தாபனச் செலவுகள் | 21 | 75,495,133.93 | 67,459,560.25 |
| நிதிச் செலவுகள் | 22 | 33,093.05 | 16,857.00 |
| **மொத்தச் செலவுகள்** | | 82,976,895.44 | 74,429,602.98 |
| வருடத்திற்கான மேலதிகம் / (குறைவு) | | (13,221,554.90) | (3,053,936.42) |
| **பிற வருமானங்கள்** | | | |
| களஞ்சியக் கட்டிடம்,மற்றும் விற்பனைக் கூட அகற்றலினால் ஏற்பட்ட இழப்பு | | (907,794.39) | - |
| **வருடத்திற்கான தேறிய மேலதிகம் / (குறைவு)** | | (14,129,349.29) | (3,053,936.42) |

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை
உரிமங்களில் ஏற்பட்ட மாற்றம் தொடர்பான அறிக்கை
2011 டிசம்பர் 31ம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கானது

ரூ.'000

| | திரண்ட நிதியம் | மூலதனச் செலிற்கான அரச கொடை |
|---|---|---|
| 2009 டிசம்பர் 31ம் திகதிய மீதி | 88,459.00 | 23,678.00 |
| முன்னைய வருடத்திற்கான செம்மையாக்கம் | (6,009.00) | – |
| | .............. | .............. |
| 2009 டிசம்பர் 31ம் திகதி செம்மையாக்கப்பட்ட மீதி | 82,450.00 | 23,678.00 |
| தேறிய மேலதிகம் / (குறைவு) | (3,054.00) | - |
| மூலதனத்திற்கான கொடை | ———— | 6,800.00 |
| வருடத்திற்கான செம்மையாக்கம் | 17,795.00 | (17,795.00) |
| 2010 டிசம்பர் 31 திகதிய மீதி | 97,191.00 | 12,683.00 |
| முன்னைய வருடத்திற்கான செம்மையாக்கம் | 5,350.00 | 968.00 |
| **2010 டிசம்பர் 31 திகதி செம்மையாக்கப்பட்ட மீதி.** | **102,541.00** | **13,651.00** |
| தேறிய மேலதிகம் / (குறைவு) | (14,129.00) | - |
| மூலதனத்திற்கான கொடை | – | 14,003.00 |
| மூலதனச் சொத்துக் கொள்வனவு | 13,734.00 | (13,734.00) |
| **2011 டிசம்பர் 31 திகதிய மீதி** | **102,146.00** | **13,920.00** |

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை

*காசுப் பாய்ச்சல் அறிக்கை*

2011 டிசம்பர் 31ம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கானது

| | | 31.12.2011 |
|---|---|---|
| | | ரூ. ச. |
| **தொழிற்பாட்டுச் செயற்பாடுகளினாலன காசுப் பாய்ச்சல்** | | |
| தேறிய மேலதிகம் / (குறைவு) | | (14,129,349.29. |
| **செம்மையாக்கங்கள** | | |
| தேய்மானம் | 6,956,493.76 | |
| முன்னைய வருடத்திற்கான செம்மையாக்கம் | 1,206,201.34 | |
| சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 8,162,695.10 | |
| அகற்றலினால் ஏற்பட்ட இழப்புக்கள் | 907,794.39 | |
| பணிக்காலக் கொடுப்பனவுக்கான ஒதுக்கம் | 7,604,378.53 | |
| | | 16,674,868.02 |
| **மூலதன மாற்றத்திற்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபங்கள்** | | 2,545,518.73 |
| இருப்புக்களில் அதிகரிப்பு / குறைவு | (4,845,835.56) | |
| பெறவேண்டியனவற்றில் அதிகரிப்பு / குறைவு | 338,182.62 | |
| முற்பணக் கொடுப்பனவுகளில் அதிகரிப்பு / குறைவு | (310,550.39) | |
| வைப்புக்களில் அதிகரிப்பு / குறைவு | (12,039.66) | |
| கொடுக்கவேண்டியவற்றில் அதிகரிப்பு / குறைவு | 1,208.47 | |
| திரண்ட செலவுகளில் அதிகரிப்பு / குறைவு | (54,625.74) | |
| ஊழியர் நலன்களில் அதிகரிப்பு / குறைவு | 4,459.27 | |
| பிற நடைமுறைப் பொறுப்புக்களில் அதிகரிப்பு / குறைவு | (62,428.59) | |
| | | (4,941,629.58) |
| **செயற்பாடுகளினாலான காசுப் பிறப்பாக்கம்** | | (2,396,110.85) |
| ஓய்வுகால பணிக்கொடை- செலுத்தப்பட்டது | | (1,609,994.70) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளால் கிடைத்த தேறிய நிதிப்பாய்ச்சல | | (4,006,105.55) |
| **முதலீட்டுச் செயற்பாடுகளாலான நிதிப் பாய்ச்சல்** | | |
| மூலதனச் செலவினத்திற்கான அரச கொடை | 8,403,000.00 | |
| ஆண்டிற்கான முதலீடுகள் | | |
| சொத்துக்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் கொள்வனவு | (8,134,331.12) | |
| முதலீட்டுச் செயற்பாட்டினாலான தேறிய நிதிப்பாய்ச்சல் | | 268,668.88 |
| <u>நிதியிடற் செயற்பாட்டுகளினாலான நிதிப்பாய்ச்சல்</u> | | |
| நீண்டகாலக் கடன்பாடுகளுக்கான மீள் கொடுப்பனவு | - | |
| காசு மற்றும் காசுச்சமானங்களிலான தேறிய அதிகரிப்பு/ (வீழ்ச்சி) | | (3,737,436.67) |
| ஆண்டுத் தொடக்கத்தில் காசு மற்றும் வங்கி மீதி | | 4,489,923.74 |
| வருட இறுதியில் காசு மற்றும் காசுச்சமானங்கள் | | 752,487.07 |
| வருட இறுதியில் காசு மற்றும் காசுச்சமானங்கள் | | |
| 31.12.2011 அன்று வங்கியில் இருந்த பணம் | | 752,487.07 |

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை

2011 டிசம்பர் 31ம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான
கணிசமான கணக்கீட்டுக் கொள்கைகள்

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையானது (NLDSB) 1970 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கப் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபைச் சட்டத்தை இரத்துச் செய்து உருவாக்கப்பட்ட 1998 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டது.

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் பிரதான நோக்கம் நிறுவனத்தினதும் நூலக சேவை அபிவிருத்திக்கும் திட்டமிட்டு உதவுவதும், தேசிய நூலகத்தை உருவாக்கி கொண்டு நடத்துதல், பொது நூலகங்கள் மற்றும் பாடசாலை நூலகங்களின் உயர்வு மற்றும் அபிவிருத்தியின் பொருட்டு ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்குதல், வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவித்தல், நூல் அபிவிருத்தி, ஆவணவாக்கல் செயற்பாடுகளில் ஈடுபடுதல் போன்றனவாகும்.

01. பொது

01.01. அடிப்படை தயாராகுதல்

a) நிதி நிலை அறிக்கை, நிதிச் செயற்பாட்டு அறிக்கை, உரிம மாற்றங்கள் பற்றிய அறிக்கை, நிதிப்பாய்ச்சல் மற்றும் கணக்கியல் கொள்கைகள் பற்றிய அறிக்கை, சபைக் கணக்குகளுக்கான குறிப்புக்கள் என்பன இலங்கைப் பட்டையக்கணக்காளர் நிறுவனத்தினால் விதிக்கப்பட்டுள்ள இலங்கைப் பொதுத்துறை கணக்கியல் நியமங்களை (SLPSAS) முன்னீடாகக் கொண்டது.

   2011 ஆம் ஆண்டின் நிதி அறிக்கைக்காக இலங்கைப் பொதுத்துறை கணக்கியல் நியமங்களின் முதல் நான்கு நியமங்கள் மட்டுமே பின்பற்றப்பட்டுள்ளன.

b) சபையின் நிதி அறிக்கையானது வரலாற்றுக் கிரய பாரம்பரியத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது

c) நிதி அறிக்கையைப் பாதிக்கும் பணவீக்கம் தொடர்பாக எவ்வித செம்மையாக்கல் அறிக்கைகளும் தயாரிக்கப்படவில்லை.

d) சபையின் நிதி அறிக்கையானது இலங்கை ரூபாய்களில் தயாரிக்கப்பட்டுள்ளது.

e) சபையின் நிதி அறிக்கையானது 1998 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் சட்டத்துக்கு இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளது.

f) சபையின் நிதி அறிக்கையானதுதொடர்ந்து இயங்கும் அமைப்பு கருத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளது.

01.02. ஒப்பீட்டுத் தகவல்கள்

கணக்கியல் கொள்கைகள் தொடர்ந்து பிரயோகிக்கப்பட்டுள்ளதுடன் ஆண்டுக்கான கணக்கை நிச்சயப்படுத்தத் தேவையான இடங்களில் முன்னைய ஆண்டுக்கான இலக்கங்களும் சொற்பதங்களும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

01.03 காட்சியின் நிலைப்புத் தன்மை

நிதி அறிக்கையில் உள்ள விடயங்களின் சமர்ப்பித்தலும் பகுப்பாக்கமும் SLPSAS-03 ற்கு அமைவாக மிகவும் சரியாகத் தகவல்களை வழங்குவதற்காக 2011 ஆம் ஆண்டில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை
குறிப்பிடத்தக்க (கணிசமான) கணக்கியற் கோட்பாடுகள்
2011டிசம்பர் 31ம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கானது

02. சொத்துக்களும் அவற்றின் மதிப்பீட்டு அடிப்படைகளும்

நிதி நிலைமைகள் அறிக்கையில் தற்போது சொத்துக்கள் என்பது காசு, காசுக்குச் சமானமானவை மற்றும் சாதாரண செயற்பாட்டின் போது அல்லது சாதாரண செயற்பாட்டு முறைமையின்கீழ் ஒரு வருட காலத்தினுள் அல்லது பாதீட்டுத் திகதியில் இருந்து ஒரு வருடகாலத்தினுள் இதில் எது குறைந்ததோ அதில் காசாக வரும் என எதிர்பார்க்கப்படுபவை

02.01 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் பெறுமானத் தேய்வு

02.01.01 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பன திரண்ட பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்ட பெறுமதியைக் குறிக்கும். ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் கொள்வனவு அல்லது குறைவு விலைபெறுமதியானது சொத்துக்கள் அவற்றின் பிரயோசனத்தின் பொருட்டு மாற்றி அமைப்பதினால் ஏற்பட்ட செலவுகளையும் உள்ளடக்கும். கொள்வனவு, சொத்துக்களின் விரிவாக்கம் அல்லது அவற்றின் நிலையான தன்மையிலிருந்து அவை வழங்கும் சேவைகளுக்கான அபிவிருத்தி அல்லது வழங்கும் சேவையின் அளவை அதிகரிக்க செலவழிக்கப்பட்டதெல்லாம் மூலதனச் செலவாகக் கருதப்படும்.

02.01.02 தேய்மானம்

சொத்துக்களுக்கு கீழே காட்டப்பட்டுள்ளவாறு குறைந்து வரும் முறையைக் கையாண்டு பெறுமானத் தேய்வு கணிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| கட்டிடங்கள் | 02 ½ % |
| சுவரோவியம் | 02 ½ % |
| உபகரணங்கள் | 10 % |
| மோட்டார் வாகனங்கள் | 10 % |
| நூலக உபகரணங்கள் | 10 % |
| நாட்டார் இலக்கிய நிலைய உபகரணங்கள் | 10 % |
| நூலிருப்பு – தேசிய நூலகம் | 10 % |
| நூலிருப்பு – தேசிய விஞ்ஞான நூலகம் | 10 % |
| நூல் மட்டைகட்டும் உபகரணங்கள் | 10 % |
| நுண்படச்சுருள் மற்றும் இலத்திரனியல் வளங்கள் | 10 % |

நிலையான சொத்துக்களில் அவற்றின் எஞ்சியுள்ள பாவனைக்காலத்திற்கு பெறுமானத் தேய்வு கழிக்ககப்பட்டுள்ளதுடன் கொள்ளவனவு செய்த வருடத்தில் அல்லது அவற்றைப் பெற்றுக் கொண்ட வருடத்தில் அவற்றிற்கு பெறுமானத் தேய்வு கழிக்கப்படவில்லை. பொருளைக் கழிவகற்றும் காலத்தில் முழுவருடத்திற்கான பெறுமானத்தேய்வு வழங்கப்பட்டுள்ளது.

02.02 தொக்குகள் (இருப்பு)

தொக்குகள் அதி குறைந்த கிரயத்திலோ அல்லது தேறிய தேறத்தக்க பெறுமதியில் எது குறைந்ததோ அதில் மதிப்பிடப்பட்டுள்ளது.

02.03 பெறவேண்டியவை

பெறவேண்டியவை தேறும் என மதிப்பிடப்பட்ட தொகையே குறிப்பிடப்பட்டுள்ளது.

**தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை**
**குறிப்பிடத்தக்க (கணிசமான) கணக்கியற் கோட்பாடுகள்**
**2011 டிசம்பர் 31ம் ஆதிகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கானது**

**பரிப்புக்களும் ஏற்பாடுகளும்**

3.01 நிதிநிலை அறிக்கைகளில் நடைமுறை பரிப்புக்கள் என குறிப்பிடப்பட்டள்ளவை நிதிநிலை அறிக்கைத் திகதியில் இருந்து ஒரு வருட காலத்தினுள் கேட்கும் போது பெற்றுக்கொள்ளப்படும் நிலை சார்ந்தவையாகும்.
நடைமுறையற்ற பரிப்புக்களாவன நிதிநிலை அறிக்கைத் திகதியில் இருந்து ஒரு வருட காலத்தின் பின்னர் கொடுக்கப்படவேண்டிய கொடுப்பனவுகளைக் குறிக்கும்.
நிதி அறிக்கைகளைத் தயரிக்கும்போது பரிப்புக்கள் கணக்கில் கொள்ளப்படுமென்பது சகலரும் அறிந்ததே.

3.02 **இளைப்பாறல் பயன்கள்**

இலங்கைக் கணக்காய்வு நியமங்கள் (LKAS19) ஊழியர் பயன்களிற்கு இசைவாக சகல ஊழியர்களும் சேவையாற்றத் தொடங்கி ஆண்டொன்று பூர்த்தியானதும் ஓய்வு காலப் பணிக்கொடுப்பனவிற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டள்ளது. எனினும் 1983 ஆம் ஆண்டின் 12ம் இலக்க பணிக்காலக் கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் பிரகாரம் ஊழியர் ஒருவர் தொடர்ச்சியான ஐந்து ஆண்டுகள் சேவையாற்றியதன் பின்னரே ஊழியர் ஒருவரின் பரிப்பு ஆரம்பிக்கிறது. இப்பரிப்பானது வெளிக்களத்தில் இருந்து நிதிவழங்கப்படவில்லை.

4. **நிதிச் செயற்பாடுகள் பற்றிய அறிக்கை**

**4.01 வருமானம்**

a) இத்திட்டத்தின் வருமானமானது கேட்போர்கூட வாடகைக் கட்டணங்கள், நூல் விற்பனைக்கூட வருமானங்கள், வட்டிவருமானங்கள் மற்றும் ஏனைய வருமானங்களைப் பிரதிபலிக்கிறது.

b) சகல வருமானங்களும் காசின் அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளது.

c) 2011 ஆம் ஆண்டில் அரசாங்கத்திடம் இருந்து மீள் வரும் செலவினம் மற்றும் மூலதனச் செலவிற்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட அரச கொடைகள்

**4.02 வருமானங்களை இனங்காணல்**

a) மேற்குறிப்பிடப்பட்டுள்ள வருமானங்கள் நிதி அடிப்படையில் அமைந்துள்ள துடன் குறிப்பிட்ட செலவினங்களுடன் இவை ஒப்பிட்டுப் பார்க்கப்படும்.

b) வட்டி வருமானம் கால அடிப்படையில் திரட்ட ப்பட்டுள்ளது

**4.03 செலவினம்**

தேநூஆசே சபையின் செயற்பாடுகளின் போது ஏற்படும் சகல செலவினங்களும் மற்றும் மூலதனச் சொத்துக்களை வினைத்திறனுடன் பேணும் சகல செலவினங்களும் அட்டுறு அடிப்படையில் வருமானமாக மாற்றப்பட்டுள்ளதுடன் ஆண்டின் குறைவில் மேலதிகமாகக் காட்டப்பட்டுள்ளது.

05 அரச கொடைகள்

கடந்த பல வருடங்களாக அரச கொடைகள் வருமானமாக இனங்காணப்பட்டுள்ளதுடன் ஒழுங்குமுறையில் நட்டவீடு வழங்குவதற்காக வழங்கப்பட்டனவற்றை தொடர்புடைய செலவுகளுடன் ஒத்துப்பார்த்தல்அவசியமாகும்.

06. நிதிப்பாய்ச்சல் அறிக்கை

திட்டத்தின் நிதிப்பாய்ச்சல் அறிகையானது இலங்கைப் பொதுத்துறை கணக்கியல் நியமம் - 02 நிதிப் பாய்ச்சல் அறிக்கைக்கு இணங்க மறைமுகமான முறைமையின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

07.நிதிநிலை அறிக்கைத் திகதியின் பின் நடைபெறும் நிகழ்வுகள்

நிதி நிலை அறிக்கையின் பின்னரான சகல சாதனங்களும் வெளிக்காட்டப்பட்டுள்ளனவாகவும் பொருத்தமான இடங்களில் மாற்றியமைக்கப்பட்டதாகவும் கவனத்தில் கொள்ளப்படும்.

**தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை**

***நிதி அறிக்கைக்கான குறிப்புக்கள்***

| | 31.12.2011 | 31.12.2010 |
|---|---|---|
| | ரூ. சுதம். | ரூ. சுதம் |
| **குறிப்பு 1: காசும் காசுச் சமானங்களும்** | | |
| கணக்கு இலக்கம் 2323283 - இலங்கை வங்கி | 122,323.70 | 4,098,295.26 |
| கணக்கு இலக்கம்- 100113398963- மக்கள் வங்கி | 7,030.06 | 7,030.06 |
| கணக்கு இலக்கம் -100163170315- மக்கள் வங்கி | 623,133.31 | 384,598.42 |
| | 752,487.07 | 4,489,923.74 |
| **குறிப்பு 2 : பெற்றுக்கொள்ளவேண்டியவை** | | |
| சம்பள முற்பணம் | 43,284.52 | 43,284.52 |
| விழாக்கால முற்பணம் | 158,630.16 | 154,630.16 |
| துயர் கடன் | 16,005,736.72 | 16,459,857.20 |
| விசேட முற்பணக் கொடுப்பனவு | 4,250.00 | 2,500.00 |
| சில்லறைக் காசுக்கணக்கு முற்பணம் | 15,223.00 | 15,223.00 |
| நானாவித முற்பணக் கொடுப்பனவுகள் | 179,814.91 | 69,627.05 |
| | 16,406,939.31 | 16,745,121.93 |
| **குறிப்பு 3: தொக்குகள்** | | |
| நூலிருப்பு: சர்வதேச நூல் பரிமாற்றச் சேவை | 106,435.30 | 109,922.80 |
| நூலிருப்பு : விற்பனை மற்றும் பிரித்தளித்தல் | 13,435,468.07 | 9,992,005.18 |
| நூலிருப்பு : சிறப்பிலக்கிய நூல்கள் | 1,795,995.50 | 1,795,995.50 |
| நூலக எழுதுகருவிகள் இருப்பு | 865,852.13 | 825,352.13 |
| நூலக உபகரணங்கள்- விற்பனைக்கான | 261,211.00 | 261,211.00 |
| எழுதுகருவிகள் இருப்பு – அலுவலகம் | 1,341,864.47 | 387,811.30 |
| எழுதுகருவிகள்இருப்பு- (நூல் விற்பனைக் கூடம்) | 1,431,094.84 | 1,431,094.84 |
| WIP – புத் சரண | 411,307.00 | – |
| | 19,649,228.31 | 14,803,392.75 |
| **குறிப்பு 04- முற்பணக் கொடுப்பனவுகள்** | | |
| திருத்தல் மற்றும் பேணல் - அலுவலக உபகரணம் | – | 6,782.00 |
| புதினத்தாள்களும் வெளியீடுகளும் | – | 88,385.00 |
| புகையிரதப் பயணச் சீட்டு | 67,021.00 | 28,353.33 |
| காப்புறுதி மற்றும் அனுமதிப்பத்திரம்- மோட்டார் வாகனம் | 172,212.42 | 73,738.17 |
| காப்புறுதி – சொத்துக்கள் | – | 186,601.00 |
| சர்வதேச நூலகங்களின் அங்கத்துவக் கட்டணம் | 247,014.00 | – |
| வழங்கலும் கேள்வியும் - ஏனையவை | 212,205.52 | 6,346.19 |
| நானாப்பிரகாரம் | 4,372.50 | 2,069.36 |
| | 702,825.44 | 392,275.05 |

குறிப்பு 05 – வைப்புக்கள்

| | | |
|---|---|---|
| எரிபொருளுக்கான வைப்பு | 56,116.00 | 56,116.00 |
| மோட்டார் வாகனத் திருத்தத்திற்கான வைப்பு | 10,000.00 | 10,000.00 |
| ஊழியர் பாதுகாப்பு வைப்புக்கள்-தே.சே.வ. | 166,066.68 | 161,607.41 |
| நூல் பரிமாற்றச் சேவைக்கான வைப்பு | 160,281.61 | 152,701.22 |
| | 392,464.29 | 380,424.63 |

குறிப்பு 06- உட்கட்டமைப்பு, இயந்திரங்களும் உபகரணங்களும்

| | | | |
|---|---|---|---|
| நூலக உபகரணங்கள் | 6.1 | 26,206.24 | 29,118.04 |
| நாட்டார் இலக்கிய நிலைய உபகரணங்கள் | 6.11 | 8,369.05 | 9,298.95 |
| நூல் மட்டைகட்டும் உபகரணங்கள் | 6.111 | 388,247.20 | 410,502.45 |
| அலுவலகத் தளபாடங்களும் உபகரணங்களும் | 6.iv | 18,931,527.90 | 16,563,090.20 |
| மோட்டார் வாகனங்கள் | 6.v | 7,560,491.53 | 2,000,546.14 |
| | | 26,914,841.92 | 19,012,555.78 |

குறிப்பு 07- காணியும் கட்டிடமும்

| | | | |
|---|---|---|---|
| தேசிய நூலகக் கட்டிடம் | 7.1 | 39,599,215.50 | 39,708,763.79 |
| களஞ்சியக் கட்டிடமும் விற்பனைக் கூடமும் | 7.11 | -- | 931,071.17 |
| சபையின் சுவர் ஓவியங்கள் | 7.111 | 589,563.14 | 604,680.14 |
| | | 40,188,778.64 | 41,244,515.10 |

குறிப்பு 08 – ஏனைய நிதிசாராச் சொத்துக்கள்

| | | | |
|---|---|---|---|
| நூலிருப்பு – தேசிய நூலகம் | 8.1 | 36,226,742.57 | 39,845,424.80 |
| நூலிருப்பு – தேசிய விஞ்ஞான நூலகம் | 8.11 | 356,245.51 | 395,828.34 |
| நுண்படச்சுருள் மற்றும் இலத்திரணியல் வளங்கள் | 8.111 | 2,676,433.50 | -- |
| | | 39,259,421.58 | 40,241,253.14 |

குறிப்பு 09- செலுத்தவேண்டியவை

| | | |
|---|---|---|
| கேள்விப் பத்திர வைப்பு | 230,270.20 | 246,282.20 |
| பாதுகாப்பு வைப்புக்கள் - பிறர் | 34,725.00 | 34,725.00 |
| பாதுகாப்பு வைப்புக்கள்- நூல்பரிமாற்றச் சேவை | 13,725.00 | 13,725.00 |
| பிடிமானக் காசு | 88,640.29 | 64,057.49 |
| முத்திரைக் கட்டணக் கொடுப்பனவு | 64,270.00 | 63,795.00 |
| செலுத்தவேண்டிய வரி | 86,175.68 | 75,412.18 |
| ஆசிரிய எழுத்தாளர் நூல்களுக்கான கடன்கொடுத்தோர் | 490,555.97 | 509,156.80 |
| முற்கூட்டியே பெறப்பட்ட சந்தாக்கள் | 25,850.00 | 25,850.00 |
| | 1,034,212.14 | 1,033,003.67 |

குறிப்பு 10- திரண்ட செலவினம்

| | | |
|---|---|---|
| மேலதிக நேரம் மற்றும் விடுமுறைநாட் கொடுப்பனவுகள் | 35,289.71 | 20,400.14 |
| விருந்தோம்பற் செலவுகள் | 1,675.00 | 2,292.00 |
| பிரயாணம்- ஊழியர்- உள்நாடு | 9,045.50 | 434.00 |
| தகவல் தொழில்நுட்பம்-இணையச் செலவு | – | 35,640.57 |
| கட்டிடம் திருத்தம் மற்றும் பேணல் | 49,795.20 | 79,184.00 |
| தொலைபேசி | 91,291.65 | 71,921.70 |
| மின்சாரம் | 417,008.00 | – |
| விளம்பரச் செலவுகள் | – | 16,765.30 |
| பாதுகாப்புச் செலவுகள் | – | 102,547.15 |
| கணக்காய்வுக் கட்டணம் | 1,000,240.00 | 800,240.00 |
| முத்திரைக் கட்டணம் | – | 475.00 |
| நூல் அபிவிருத்தித் திட்டச் செலவுகள் | – | 224,730.00 |
| கையெழுத்துப் பிரதிகளின் மதிப்பாய்வுச் செலவுகள் | – | 59,441.60 |
| நூலக இலக்கியங்கள் மற்றும் வெளியீடுகளினால் செலவுகள் | – | 45,687.50 |
| புதிய வெளியீடுகளின் கொள்வனவுச் செலவுகள் | – | 267,961.09 |
| புலமைப் பரிசில் மற்றும் பயிற்சிச் செலவுகள் | – | 42,534.40 |
| அச்சிடற் செலவுகள் | – | 6,324.00 |
| புதினத்தாள் மற்றும் விளம்பரச் செலவுகள் | – | 8,320.00 |
| ஏனைய படிகள் | 78,600.00 | – |
| தபாற் செலவு | 31,219.20 | – |
| கேள்வி வைப்பு | 15,000.00 | – |
| எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிகள் | 21,523.00 | – |
| தளபாடம், பொருத்துக்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 9,500.00 | – |
| ஏனைய திரண்ட செலவுகள் | 6,595.00 | 42,534.40 |
| | 1,766,782.26 | 1,827,432.85 |

குறிப்பு 11- ஊழியர் நலன்

| | | |
|---|---|---|
| ஊழியர் பாதுகாப்பு வைப்புக்கள் | 68,200.00 | 71,200.00 |
| பாதுகாப்பு வைப்பு வட்டி | 89,966.32 | 82,507.05 |
| | 158,166.32 | 153,707.05 |

குறிப்பு 12 – ஏனைய நடைமுறைப் பரிப்புக்கள்

| | | |
|---|---|---|
| ஏனைய நிறுவனங்களின் மீளச் செலுத்தவேண்டிய செலவு | 839,597.85 | 902,026.44 |
| | 839,597.85 | 902,026.44 |

குறிப்புப் 13 – ஏனைய உரிமங்களினால் வழங்கப்பட்ட மூலதனம் / கொடைகள்

| | | |
|---|---|---|
| கொடை மற்றும் அன்பளிப்புக் கணக்கு(நூலக சாதனம்) | 5,184,329.97 | 5,184,329.97 |
| முற்கொண்டுவந்த மீதிகடந்தகாலத் தவறுகள் | (5,111,875.82) | -- |
| | 72,454.15 | 5,184,329.97 |

குறிப்பு 14- ஒதுக்கங்கள்

| | | |
|---|---|---|
| அரச கொடை மற்றும் மூலதனச் செலவுகள் | | |
| மீதி முன்கொண்டுவந்தது | 12,683,621.81 | 23,678,820.95 |
| கடந்த காலச் செம்மையாக்கம் | 968,132.00 | -- |
| | 13,651,753.81 | |
| கூட்டு- திறைசேரியில் இருந்து பெற்றுக்கொண்டது | 14,003,000.00 | 6,800,000.00 |
| | 27,654,753.81 | 30,478,820.95 |
| கழி-மூலதனச் சொத்துக்களின் கொள்வளவு | (13,734,331.12) | (17,795,199.14) |
| | 13,920,422.69 | 12,683,621.81 |

குறிப்பு 15 – திரண்ட நிதியம்

| | | |
|---|---|---|
| முற்கொண்டுவந்த மீதி | 97,190,755.33 | 88,458,793.30 |
| கடந்தகாலச் செம்மையாக்கம் | 5,349,945.16 | (6,009,300.69) |
| | 102,540,700.49 | 82,449,492.61 |
| கூட்டு / (கழி) | | |
| செலவுக்கு மேலான வருமானம் | (14,129,349.29) | (3,053,936.42) |
| மூலதனச் சொத்துக்கள் கொள்வனவு | 13,734,331.12 | 17,795,199.14 |
| | 102,145,682.32 | 97,190,755.33 |

குறிப்பு 16 – கட்டணங்கள், குற்றப்பணம் மற்றும் தண்டங்கள்

| | | |
|---|---|---|
| கையெழுத்துப்பிரதிகள் வாசிப்பதற்கான கட்டணம் | 149,244.00 | 800.00 |
| வாசகர் பதிவுக் கட்டணம் | 294,337.00 | 285,985.00 |
| கட்டிட வாடகைக் கட்டணம் | 6,360.00 | 6,905.00 |
| ISBN விண்ணப்பப் பத்திரக் கட்டணம் | 433,919.00 | 380,895.00 |
| தண்டப்பணம் மற்றும் மேலதிகக் க்ட்டணம் | 47,990.00 | 22,350.00 |
| | 931,850.00 | 696,935.00 |

குறிப்பு : 17- வட்டி வருமானம்

| | | |
|---|---|---|
| துயர் கடன் | 666,884.07 | 719,419.77 |
| விசேட முற்பணம் | 7,720.38 | 7,196.76 |
| ஏனைய வட்டிகள் | 7,580.39 | 7,642.19 |
| | 682,184.84 | 734,258.72 |

குறிப்பு 18 – வெளியீடுகளுக்கான சந்தாக்கள்

| | | |
|---|---|---|
| தேசிய நூற்பட்டியல் விற்பனை | 141,760.00 | 89,202.50 |
| சபை வெளியீடுகள் விற்பனை | 143,765.75 | 217,610.22 |
| | 285,525.75 | 306,812.72 |

குறிப்பு 19 – ஏனைய வருமானங்கள்

| | | |
|---|---|---|
| போட்டோப் பிரதிக் கட்டணம் | 110,538.39 | 96,769.09 |
| விண்ணப்பப்படிவ விற்பனை மற்றும் கேள்வி வைப்பு | 27,000.00 | 16,750.00 |
| எரிபொருள் மீளப்பெறல் | – | 7,057.00 |
| விண்ணப்பப்படிவ விற்பனை-நூல் அபிவிருத்தித் திட்டம் | 42,350.00 | 15,290.00 |
| நூல் மட்டைகட்டும் சாதனங்களின் விற்பனை | (39,037.00) | 30,532.00 |
| மேலதிக மற்றும் ஒதுக்கப்பட்ட சாதனங்களின் விற்பனை | 163,544.50 | 4,200.00 |
| நூலக தரநிர்ணயம் செய்ததால் கிடைக்கப்பெற்றவை | 62,550.00 | 50,250.00 |
| ஆலோசனைக் கட்டணம் | – | 2,600.00 |
| சில்லறை வருமானம் | 709,380.03 | 2,419,681.28 |
| | 1,076,325.92 | 2,643,129.37 |

குறிப்பு 20- நூலக சேவைச் செலவுகள்

| | | |
|---|---|---|
| அங்கத்துவக் கட்டணம்: சர்வதேச நூலகங்கள் | 284,698.00 | 411,859.00 |
| சர்வதேச பரிமாற்றச் சேவை | 5,400.00 | 24,876.20 |
| நூலீட்டற் செலவுகள் | 58,765.00 | 122,231.15 |
| வாசகர் கல்வி மற்றும் விளம்பரச் செலவுகள் | 218,797.88 | 23,278.00 |
| நூலக ஆய்வுச் செலவுகள் | 63,358.50 | 17,100.00 |
| எழுதுகருவிகளினால் செலவுகள் | 21,102.00 | 59,314.58 |
| தேசிய நூற்பட்டியல் வெளியீடு | 69,480.00 | 198,195.98 |
| கடந்தகால தேசிய நூற்பட்டியல் வெளியீடு | – | 8,077.04 |
| விசேட நூற்பட்டியல் வெளியீடு | 4,635.00 | 8,490.00 |
| சமூக விஞ்ஞான ஆவணவாக்கல் | 53,979.00 | 26,237.86 |
| புதினத்தாட் கூட்டி | 16,475.00 | – |
| ஏனைய ஆவணவாக்கற் செயற்பாடுகள் | 101,382.00 | 60,495.00 |
| நூலக நிகழ்ச்சிகளும் கண்காட்சிகளும் | 1,103,740.76 | 49,010.16 |
| நூலகங்களுக்கு வழங்கப்பட்ட நூல் அன்பளிப்பு | 1,504,988.00 | 2,675,275.00 |
| நூலகங்களுக்கு வழங்கப்பட்ட உபகரணங்கள் | – | 3,850.00 |
| தேசிய வாசிப்பு மாத நிகழ்ச்சிகளினால் செலவு | 705,038.78 | 1,017,781.92 |
| கிராமிய நூலக அபிவிருத்தி | 287,234.00 | 186,485.00 |
| கணனிச் செயற்பாடுகளினாலான செலவு | 27,474.72 | 198,600.80 |
| இணையத்தினாலான செலவுகள் | 482,527.55 | 482,621.11 |
| நூலகக் கல்வி மாநாடுகள் | 253,973.00 | 136,540.00 |
| மாநாடுகள்,விரிவுரைகள் பயிற்சி நெறிகள் | 373,109.00 | 193,627.60 |
| விசேட பாடநெறிகள் | 147,962.32 | 44,537.60 |
| நூல் அபிவிருத்தித் திட்டத்தினாலான செலவுகள் | 70,084.00 | 43,182.06 |
| கையெழுத்துப்பிரதி வாசிப்பதற்கான கட்டணம் | 79,749.30 | 3,659.70 |
| சிறப்பிலக்கியங்களை பதிப்பித்தலும் வெளியிடுதலும் | 700.00 | 115,392.00 |
| நூலக இலயங்கியங்கள் வெளியீட்டுச் செலவு | 28,675.00 | 167,662.00 |
| சர்வதேச நியம நூல் இலக்கம் | 89,433.00 | – |
| சர்வதேச நியம பருவவெளியீடுகள் இலக்கம் | 79,023.00 | – |
| சர்வதேச நியம சங்கீத இலக்கம் | 33,103.00 | 15,350.00 |
| புதிய வெளியீடுகளின் கொள்வனவு | 616,320,32 | 6,056.00 |
| நூல் பாதுகாத்தல் | 233,682.36 | 273,058.21 |
| நூல் மட்டை கட்டுதல் | 340,689.97 | 316,752.74 |
| பேணற் செலவுகள் | 93,088.00 | 63,589.02 |
| | 7,448,668.46 | 6,953,185.73 |

குறிப்பு 21- நிருவாக மற்றும் தாபனச் செலவுகள்

| | | | |
|---|---|---|---|
| கூலி, சம்பளம் மற்றும் ஊழியர் நலன்கள் | 21.1 | 53,552,520.42 | 45,693,136,81 |
| வழங்கல் மற்றும் நுகர்வுப் பொருட்கள் | 21.2 | 10,053,112.98 | 9,848,906.73 |
| மூலதனச்சொத்துக்கள் திருத்தல் மற்றும் பேணல் | 21.3 | 4,134,729.87 | 4,614,238.23 |
| தேய்மானம் அல்லது தேய்மானப்படுத்தப்பட்ட கிரயம் | 21.4 | 6,956,493.76 | 6,538,176.13 |
| ஏனைய செலவுகள் | 21.5 | 798,276.90 | 765,102.35 |
| | | 75,495,133.93 | 67,459,560.25 |

குறிப்பு 22 – நிதிக் கிரயம்

| | | |
|---|---|---|
| வங்கிக் கட்டணம் | 33,093.05 | 16,857.00 |
| | 33,093.05 | 16,857.00 |

# தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை

## குறிப்பு நிதி தொடர்பான அறிக்கை

## குறிப்பு – 06,07,08

## 2011 டிசம்பர் 31இல் முடிந்த திட்டமிடல், சொத்து மற்றும் உபகரணங்களின் விபரம்

| குறிப்பு | விபரங்கள் | மதிப்பீடு குறைப்பு % | 01.01.2011ல் உள்ள பெறுமானம் | மேலதிகம் | அகற்றல் | மொத்தத் தொகை | 2011.01.01 ஆம் ஆண்டில் திரட்டப்பட்டவை | மேலதிகம்/ அகற்றல் | 2011 ஆம் ஆண்டின் தேய்மானம் | திரட்டிய மொத்தத் தேய்மானம் | சராசரி பெறுமதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6. I | நூலக உபகரணங்கள் | 10% | 96,512.16 | - | - | 96,512.16 | 67,394.12 | - | 2,911.80 | 70,305.92 | 26,206.24 |
| 6. II | நாட்டார் கலை நிலைய உபகரணங்கள் | 10% | 46,874.00 | - | - | 46,874.00 | 37,575.05 | - | 929.90 | 38,504.95 | 8,369.06 |
| 6. III | நூல் மட்டை கட்டும் உபகரணங்கள் | 10% | 1,526,750.44 | 18,795.00 | - | 1,545,545.44 | 1,116,247.99 | - | 41,050.25 | 1,157,298.24 | 388,247.21 |
| 6 IV | அலுவலக தளபாடங்களும் உபகரணங்களும் | 10% | 39,161,981.07 | 4,087,746.72 | (63,000.00) | 43,186,727.79 | 22,598,890.87 | - | 1,656,309.02 | 24,255,199.89 | 18,931,527.90 |
| 6. V | மோட்டார் வாகனங்கள் | 10% | 7,658,374.74 | 5,795,600.00 | (735,000.00) | 12,718,974.74 | 5,657,828.60 | (699,400.00) | 200,054.61 | 5,158,483.21 | 7,560,491.53 |
| 7. I | தேசிய நூலகக்கட்டடம் | 2.50% | 63,888,022.00 | 883,170.80 | - | 64,771,192.80 | 24,179,258.21 | - | 992,719.09 | 25,171,977.30 | 39,599,215.50 |
| 7. II | நூல் விற்பனைசாலையும் களஞ்சிய கட்டிடமும் | 2.50% | 1,361,174.00 | - | (1,361,174.00) | - | 430,102.83 | (453"379.61) | 23,276.78 | (0.00) | 00 |
| 7. III | சுவரோவியம் | 2.50% | 890,610.25 | | - | 890,610.25 | 285,930.11 | - | 15,117.00 | 301,047.11 | 589,563.14 |
| 8 - I | தேசிய நூலகம் - நூல் இருப்பு | 10% | 82,003,344.95 | 3,085,911.75 | (3,310,926.00) | 81,778,330.70 | 42,157,920.15 | (293,493.00) | 3,687,160.98 | 45,551,588.13 | 36,226,742.57 |
| 8 - II | நூல் இருப்பு - தேசிய விஞ்ஞான நூலகம் | 10% | 2,431,276.00 | - | - | 2,431,276.00 | 2,035,447.66 | - | 39,582.83 | 2,075,030.49 | 356,245.51 |
| 8 - III | நுண்சுருள் மற்றும் இலத்திரணியல் சாதனங்கள் | 10% | - | 3,267,308.00 | - | 3,267,308.00 | - | 293,493.00 | 297,381.50 | 590,874.50 | 2,676,433.50 |
| | மொத்தம் | | 199,064,919.61 | 17,138,532.27 | (5,470,100.00) | 210,733,351.88 | 98,566,595.59 | (1,152,779.61) | 6,956,493.77 | 104,370,309.75 | 106,363,042.13 |

**குறிப்பு – 21.1- கூலி, சம்பளம் மற்றும் ஊழியர் நலன்கள்**

| | | |
|---|---|---|
| சம்பளம் மற்றும் கூலி | 37,195,704.23 | 38,001,440.23 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 4,348,493.01 | 4,506.025.07 |
| ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | 1,087,130.99 | 1.126,077.87 |
| மேலதிக நேரம் மற்றும் விடுமுறைக் கொடுப்பனவு | 1,615,481.77 | 835,364.39 |
| பணிக்கொடை | 7,604,378.53 | – |
| சபை அங்கத்தவர் ஊதியம் | 77,200.00 | 22,000.00 |
| குழு அங்கத்தவர் ஊதியம் | 120,200.00 | 57,100.00 |
| கேட்போர் கூடத்தில் வேலைசெய்வதற்கான கொடுப்பனவு | 65,050.00 | 42,175.00 |
| பிரயாணச் செலவுகள் | 230,176.50 | 126,511.50 |
| வெளிநாட்டுப் பிரயாணங்கள் மற்றும் கல்வி நிகழ்ச்சிகள் | 378,475.13 | 85,392.56 |
| ஊழியர் சீருடை | 18,935.43 | 98,393.44 |
| வைத்தியப் பரிசோதனைச் செலவுகள் | 10,520.00 | 30,597.50 |
| நலம்பேணற் செலவுகள் | 245,160.50 | 223,751.81 |
| விருந்தோம்பற் செலவுகள் | 111,223.00 | 59,317.50 |
| புகையிரத அநுசரணைப் பத்திரங்கள் | 411,499.33 | 452,740.00 |
| போட்டிப் பரீட்சைக் கட்டணம் | 32,892.00 | 26,250.00 |
| | 53,552,520.42 | 45,693,136.81 |

**குறிப்பு 21.2- வழங்கல்களும் உபயோகிக்கப்பட்ட நுகர் பொருட்கள்**

| | | |
|---|---|---|
| எழுது கருவிகளும் அச்சிட்ட படிவங்களும் | – | 878,594.48 |
| சபைச் சொத்துக்களுக்கான காப்புறுதி | 239,987.83 | 367,791.73 |
| மோட்டார் வாகனக் காப்புறுதி | 286,099.68 | 141,694.57 |
| எரிபொருள் | 1,044,694.50 | 710,111.00 |
| தொலைபேசி | 987,331.28 | 1,000,281.27 |
| மின்சாரம் | 4,921,681.62 | 4,606,305.60 |
| பாதுகாப்புச் செலவுகள் | 1,681,612.35 | 1,163,308.81 |
| போக்குவரத்து, தாமதக் கட்டணம்,குதக் கட்டணங்கள் | 20,571.00 | 113,179.00 |
| அச்சிடல் | 13,925.40 | 29,216.00 |
| புதினத்தாள்கள் மற்றும் வெளியீடுகள் | 107,955.00 | 138,557.95 |
| தபால்செலவு | 383,719.20 | 276,895.00 |
| மொழிபெயர்ப்புக் கட்டணம் | 50,047.00 | 17,240.88 |
| வழங்கல் - ஏனையோர் | 315,488.12 | 405,730.44 |
| | 10,053,112.98 | 9,848,906.73 |

**குறிப்பு 21.3 மூலதனச் சொத்துக்கள் திருத்தம் மற்றும் பராமரிப்பு**

| | | |
|---|---|---|
| கட்டிடப் பராமரிப்பு | 1,947,342.80 | 2,184,105.51 |
| அலுவலக உபகரணங்களின் பராமரிப்பு | 550,742.57 | 668.439.22 |
| சபைக் காணி பராமரிப்பு | 506,553.48 | 674,135.50 |
| மோட்டார் வாகனங்கள் பராமரிப்பு | 1,130,091.02 | 1,087,558.00 |
| | 4,134,729.87 | 4,614,238.23 |

**குறிப்பு 21.4 தேய்மானம் மற்றும் தேய்மானப்படுத்தப்பட்ட செலவு**

| | | |
|---|---|---|
| தேய்மானம் | 6,956,493.76 | 6,538,176.13 |
| | 6,956,493.76 | 6,538,176.13 |

**குறிப்பு 21.5 ஏனைய செலவுகள்**

| | | |
|---|---|---|
| கணக்காய்வுக் கட்டணம் | 200,000.00 | 400,000.00 |
| சட்டசம்பந்தமான கட்டணங்கள் | — | 20,825.00 |
| விளம்பரச் செலவுகள் | 470,152.46 | 296,369.35 |
| நானாவித செலவுகள் | 128,124.44 | 47,908.00 |
| | 798,276.90 | 765,102.35 |

**தேசிய நூலக மற்றும் சுவடிக்கூடச் சேவைகள் சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தேசிய நூலக மற்றும் சுவடிக்கூடச் சேவைகள் சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1998 இன் 51 ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் சுவடிக்கூடச் சேவைகள் சபை அதிகாரச்சட்டத்தின் 22 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசிலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று சபையின் தலைவருக்கு 2014 மே 19 ஆம் திகதி வழங்கப்பட்டது.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலாதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக தேசிய நூலக மற்றும் சுவடிக்கூடச் சேவைகள் சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

சொத்தொன்றின் பயன்தரு ஆயுட்காலத்தின் பிரகாரம் பெறுமானத்தேய்வு தீர்மானிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அது தொடர்பாக கவனத்தில் கொள்ளாது கணனியும் உபபாகங்களும், நூலகப் புத்தகங்கள், நுண் புகைப்படநாடா மற்றும் இலத்திரனியல் மூலம் என்பன குறைந்து செல்லும் மீதி முறையில் 10 சதவீதப்படி பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நூலகக் காகிதாதிகள், நூலக உபகரணங்கள் மற்றும் புத்தக விற்பனையிலிருந்து பெறப்பட்ட நிதி வருமானமாக இனங்காணப்பட்டிருந்த போதிலும் உரிய கிரயத்தை வருமானத்திற்கு எதிராக பதிவழிப்பதற்கு

நடவடிக்கை எடுக்காமையினால் இது வரையில் சபையின் பௌதீக ரீதியில் காணப்படாத இருப்பு கணக்குகளில் வெளிக்காட்டப்பட்டிருந்தது. இவ்வாறு விற்பனை செய்யப்பட்ட நூலக காகிதாதிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 1,995,006 ஆக இனங்காணப்பட்டிருந்த போதிலும் தரகு வருமானத்தை பெற்றுக்கொள்ளும் அடிப்படையில் விற்பனை செய்யப்பட்ட நூல் வெளியீட்டுச் செயற்திட்டத்தின் பெறுவனவு மற்றும் கொடுப்பனவுகள் புத்தக விற்பனை வருமானக் கணக்கில் குறிப்பிடப்பட்டமையினால் புத்தக விற்பனை வருமானத்தை இனங்காண முடியாதிருந்தது.

(ஆ) சபையினால் நூலகக் காகிதாதிகளினால் சபையின் வெளியீடுகள் உற்பத்தி செய்யப்படுவதுடன் அதற்காக பயன்படுத்தப்பட்ட சிறந்த கடதாசியைக் கொள்வனவு செய்வதற்காக ஏற்கப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 553,000 தொகை உரிய விற்பனை வருமானத்தில் ஈடுசெய்யப்பட்டு கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் எஞ்சிய தொகை கணிப்பீடு செய்யப்பட்டு அதற்கான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையினால் வெளித்தரப்பினருக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட ரூபா 268,992 தொகையான நூலகக் காப்பகம் மற்றும் கட்டும் பொருட்கள் முழுமையாக கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தது. ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 128,900 தொகையான அப் பொருட்களின் கிரயத்தில் ரூபா 89,863 தொகையான விற்பனை வருமானம் ஈடுசெய்யப்பட்டமையினால் ஏற்பட்ட ரூபா 39,037 தொகையான வரவு மீதி நானாவித வருமானத்தில் ஈடுசெய்யப்பட்டிருந்தது. அவ்வாறே இருப்புக் கணக்கு பேணப்படாமையினால் ஆண்டின் இறுதியில் எஞ்சிய தொகையான ரூபா 59,342 தொகை கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியிருப்பில் உள்ளடக்கப்பட்ட ரூபா 1,692,302 கூட்டுத்தொகையான “காகிதாதிகள்” மற்றும் “நூலக உபகரண இருப்புக்கள்” சில வருட காலமாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் பௌதீக ரீதியில் காணப்படவில்லை.

(உ) 2011 திசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பிரபல நூற்களின் பேரேட்டுக் கணக்கின் மீதி ரூபா 1,795,995 ஆக இருந்த போதிலும் களஞ்சியத்தின் உள்ளபடியான மீதி ரூபா 6,995 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ஆண்டின் இறுதியிருப்பில் காணப்பட்ட ரூபா 1,789,000 தொகையான வேறுபாடு இனங்காணப்பட்டு கணக்குகளில் சீராக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டில் ரூபா 159,404 தொகையில் உடைந்த பொருட்களாக விற்பனை செய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு என்பன இனங்காணப்பட்டு கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் போது விற்பனை செய்யப்பட்ட மோட்டார் வாகனத்தின் ரூபா 635,710 தொகையான திரண்ட பெறுமானத்தேய்வு, சொத்து அகற்றல் கணக்கில் ரூபா 735,000 ஆக சீராக்கப்பட்டிருந்தது.

(ஏ) 1998 இன் 51 ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் சுவடிக்கூடச் சேவைகள் சபை அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய ஆவணக் காப்பக சேவைத் திணைக்களத்தின் (சட்டரீதியான வைப்பு) மற்றும் வேறு நன்கொடையாகச் சபைக்குக் கிடைக்கின்ற புத்தகங்களின் பெறுமதி என்பன கணிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டின் போது உடைத்து அகற்றப்பட்ட சபையின் புத்தக விற்பனைச் சாலையின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வு என்பவற்றை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்குப் பதிலாக களஞ்சியக் கட்டிடத்தினதும் புத்தகசாலைக் கட்டிடத்தினதும் மொத்தக் கிரயமான ரூபா 1,361,174 தொகை மற்றும் மொத்தத் திரண்ட பெறுமானத் தேய்வான ரூபா 453,380 தொகை உரிய கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. அவ்வாறே உடைத்து அகற்றப்பட்ட பாதுகாப்புக் கூடாரம், மதில் மற்றும் இரும்பு வேலியின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வு என்பன உரிய கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

(ஒ) கொள்வனவுகளை உரிய இருப்புக் கணக்கில் வரவு வைப்பதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட நூலக நன்கொடை தொகுதிகளுக்கான பொருட்கள் மற்றும் அலுவலகக் காகிதாதிகள் ரூபா 94,275 தொகை "நூலக காகிதாதிகள் விற்பனை வருமானம்" கணக்கிலும் ரூபா 28,750 தொகை "நூலக உபகரண விற்பனை வருமானம்" கணக்கிலும் வரவு வைக்கப்பட்டிருந்தன.

(ஓ) சபையின் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக அனுசரணை வழங்குபவர்களிடமிருந்து கிடைத்த பணம் உரிய ஆண்டின் வருமானத்திற்கு

செலவு வைப்பதற்குப் பதிலாக "வெளி நிறுவனங்களிலிருந்து மீளளிப்புச் செய்யப்பட வேண்டிய செலவினம்" என்ற பெயரிலான கணக்கில் செலவு வைக்கப்பட்டு 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 839,598 தொகையான மீதி நடைமுறைப் பொறுப்பின் கீழ் தோற்றுவிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக உரியவாறு இனங்காணப்பட்ட பொறுப்புக்களும் காணப்படவில்லை.

### 2.2.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற 05 கணக்கு விடயங்களுக்குரிய பதிவேடுகளை பட்டோலைகளுடன் இணக்கஞ் செய்த போது ரூபா 11,136,477 கூட்டுத்தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 72,454 தொகையான மானியம் மற்றும் உதவிக் கணக்கின் மீதி மற்றும் ரூபா 1,034,212 கூட்டுத்தொகையான வைப்புக்கள் மற்றும் செலுத்த வேண்டிய எட்டு மீதிகளுக்கான பதிவேடுகள் மற்றும் பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்துவதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு முடியாது.

### 2.2.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 86,175 கூட்டுத்தொகையான வரி, உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்படாமல் செலுத்த வேண்டிய வரிக் கணக்கில் பதியப்பட்டிருந்தது.

(ஆ) கணக்காய்வுக் கட்டணத்தை வருடாந்தம் உரிய வகையில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணக் கணக்கின் மீதி ரூபா 800,240 ஆக காணப்பட்டது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1998 இன் 51 ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் சுவடிக்கூடச் சேவைகள் சபை அதிகாரச்சட்டம் | |
| (i) 3 ஆவது பிரிவு | 2010 மே 10 ஆந் திகதி கேட்டுவிலகிய அங்கத்தவர் சபையை மீள நியமிப்பதற்கு ஒரு வருடமும் 04 மாதங்களும் ஆன காலதாமதம் ஏற்பட்டிருந்தது. |
| (ii) 13 ஆம் பிரிவு | சபையின் செயலாளர் மற்றும் பிரதான பதவிநிலை உத்தியோகத்தரான பணிப்பாளர் நாயகம் பதவி 2010 யூன் 01 ஆந் திகதி தொடக்கம் 2014 மார்ச் 31 வரையும் பதிற் கடமை அடிப்படையில் பேணப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| நிதிப்பிரமாணம் 756 | சபையின் புத்தக விற்பனைச்சாலையின் எஞ்சிய இருப்பு பௌதீக ரீதியில் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை |
| (இ) 1978 திசெம்பர் 10 ஆந் திகதிய 842 ஆம் இலக்க மற்றும் 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபம் | நிலையான சொத்துப் பதிவேடு நிலையான சொத்துப் பேரேடு மற்றும் கணனி உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து ஏற்பட்ட நிதி விளைவுகள் ரூபா 14,129,349 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 3,053,936 ஆக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவுகள் ரூபா 11,075,413 இனால் வீழ்ச்சியடைந்திருந்துடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஒட்டுமொத்த வருமானம் ரூபா 1,620,326 இனால் குறைவடைந்திருந்த போதும் சபையின் செலவினம் ரூபா 8,547,292 இனால் அதிகரித்திருந்தமை மற்றும் நகர அலங்கார செயற்பாடுகளுக்காக உடைக்கப்பட்டிருந்த சபையின் கட்டிடங்களில் ரூபா 907,794 தொகையான தேறிய பெறுமதி வருமானச் செலவினக் கணக்கில் சீராக்கப்பட்டமை முக்கிய காரணமாக இருந்தது.

### 3.2 நிதியத்தின் முதலீடு

2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 13,920,423 தொகையான செலவிடப்படாத அரசாங்கத்தின் மூலதன மானியக் கணக்கின் மீதி காசாக அல்லது முதலீடாக தோற்றமளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காசேட்டின் மீதி ரூபா 122,324 ஆக மாத்திரம் இருந்தது. அதன் பிரகாரம் அந்தந்த வருடங்களில் கிடைக்கின்ற மூலதன மானியம் மீண்டெழும் செலவினங்களுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தமையும் அரசாங்க மானியங்களின் பயன்பாடு தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் போதுமானளவு இல்லாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டின் போது 08 பிரிவுகளின் கீழ் திட்டமிடப்பட்டிருந்த 50 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் வெளியீடுகள்

1998 தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அச்சிடப்பட்ட தேசிய நூல்களின் பெயர்க் கோவையில் (நடப்பு) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பௌதீக இருப்பினை இருப்புப் பதிவேட்டுடன் இணக்கஞ் செய்தபோது 4,851 பிரதிகளில் பற்றாக்குறை காணப்பட்டது. 2008 ஆம் ஆண்டில் செயற்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த புத்தகங்களின் பெயர்ப் பதிவேடு (தமிழ்) இன் செயற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தேசிய செய்திப் பத்திரிகை நுண் புகைப்படநாடா கொள்வனவு செய்யும் செயற்திட்டம்

தேசிய செய்திப் பத்திரிகையை நுண் புகைப்படநாடாவைக் கையேற்றல் தொடர்ச்சியாகவும் முறையான ரீதியிலும் மேற்கொள்ளப்படாமையின் அடிப்படையில் 1990 தொடக்கம் 2011 ஆம் ஆண்டிற்கிடையேயான காலப்பகுதியில் கையேற்கப்பட்ட நுண் புகைப்படநாடாக்களின் எண்ணிக்கை 1,217 ஆக மாத்திரம் இருந்ததுடன் அவைகள் பௌதீக பரிசோதனைக்கு உள்ளாக்காமை, அதற்காக விரிவான பதிவேடு மற்றும் தனிப்பட்ட பேரேட்டுக் கணக்கு பேணப்படாமை நுண் புகைப்படநாடா அச்சிடல் இயந்திரம் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்டமை போன்ற விடயங்களின் காரணமாக அவைகளைக் கைப்பற்றுதல், பராமரிப்பும் பயன்பாடும் திருப்திகரமற்ற நிலையில் காணப்பட்டன.

(இ) சர்வதேச நூல் பரிமாற்றச் செயற்திட்டம்

சர்வதேச நூல் பரிமாற்றச் செயற்திட்டத்திற்காக நூல்களைக் கொள்வனவு செய்யும் மூலங்களை இனங்காணாமை மற்றும் நூல்களைத் தெரிவு செய்யும் குழு நியமிக்காமை, முன்னைய ஆண்டில் சர்வதேச நிறுவனத்தினால் நிராகரிக்கப்பட்ட புத்தகங்களை உள்ளடக்கிய பட்டியலை திரும்பத் திரும்ப அந் நிறுவனத்திற்குச் சமர்ப்பித்தமை போன்ற காரணங்களினால் 2011 ஆம் ஆண்டில்

12 சர்வதேச நிறுவனங்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட 76 வகையான 912 புத்தகப் பிரதிகளில் எந்தப்புத்தகமும் கோரப்பட்டிராததுடன் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பல்வேறு மொழிகளிலிருந்தும் கிடைத்த 551 புத்தகங்கள் மற்றும் 02 சீடிக்கள் (சீடி) தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்ட முறையும் விளக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) புத்தகக் கண்காட்சியை நடாத்துதல்

1995 இன் 51 ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் சுவடிக்கூடச் சேவைகள் சபை அதிகாரச்சட்டம் 4 ஆம் பிரிவின் பிரகாரம் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்துவதற்காக கண்காட்சிகளை நடாத்துதல் சபைக்குரிய செயற்பாடாக இருந்த போதிலும் அதற்காக ஆரம்ப திட்டமிடல், பாதீட்டு அறிக்கை மற்றும் செலவின அறிக்கை என்பன தயாரிக்கப்பட்டிராததுடன் புத்தகக் கண்காட்சிச் செலவினம் முறையற்றதாக இருந்தமை, புத்தக விற்பனை வருமானம் தாமதமின்றி சபையின் நிதியத்தில் செலவு வைக்கப்படாமை போன்ற விடயங்களும் அவதானிக்கப்பட்டன.

(உ) புதிய வெளியீடுகளைக் கொள்வனவு செய்யும் செயற்திட்டம்

புதிய வெளியீடுகளைக் கொள்வனவு செய்யும் குழுவினால் புத்தகங்களின் தரத்தினையும் பெறுமதியையும் கவனத்திற்கொண்டு 108 வகையான புத்தகங்களிலிருந்து ரூபா 808,500 பெறுமதியான 3,565 பிரதிகளை மாத்திரம் கொள்வனவு செய்வதற்கு சிபார்சு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக 113 வகையான புத்தகங்களிலிருந்து ரூபா 1,800,186 பெறுமதியான 7,911 பிரதிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

## 4.3 பதவியணியினர் நிருவாகம்

2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபையின் 197 மொத்த அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் 74 வெற்றிடங்கள் காணப்பட்டன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பீசஇ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் உரிய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2011 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் இரண்டு வருட தாமதத்தின் பின்னர் 2014 பெப்ரவரி 28 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உரிய செயற்பாடுகளை நிறைவேற்றிய கால இடைவெளி, ஒவ்வொரு செயற்பாடுகளுக்காகவும் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு மற்றும் செயற்பாட்டு அளவுகள் காண்பிக்கப்படாமையின் காரணமாக அது கூட்டிணைந்த திட்டம் மற்றும் பாதீட்டுடன் ஒத்துவராதிருந்ததுடன் காலரீதியாக மீளாய்வு செய்து நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் இணங்கக்கூடிய வகையில் செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிராததுடன் அவை அங்கத்தவர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

சபையில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு உருவாக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போதும் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.4 கொள்வனவுத் திட்டம்

2011 ஆம் ஆண்டிற்காக கொள்வனவுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகளின் நல்லாளுகை தொடர்பான வழிகாட்டிக் கோவையின் 5.2.1 ஆம் பந்தியின் பிரகாரம் பாதீட்டுடன் பாதீடு செய்யப்பட்ட வருமானக் கூற்று, ஐந்தொகை மற்றும் காசேட்டக்கூற்று என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

(ஆ) பாதீட்டிற்கும் உள்ளபடியான வருமானம் செலவினத்திற்கும் இடையே 27 சதவீதம் முதல் 36 சதவீதத்திற்கிடையிலான வீச்சில் கவனத்திற்கொள்ளக் கூடிய முரண்கள் காணப்பட்டமையினால் பாதீடானது ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாக ஈடுபடுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

5.6 தீர்வு காணப்படாத கணக்காய்வு பந்திகள் தொடர்பான அவதானிப்புக்கள்

2012 மே 22 ஆந் திகதிய பாராளுமன்றத்தின் பொது முயற்சிகள் குழுவினால் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் நிறைவேற்றப்படாத செயற்பாடுகள் பின்வருமாறிருந்தது.

(அ) ஒரு உத்தியோத்தருடன் செயற்திறனற்றுக் காணப்படுகின்ற உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்காக ஒரு மாதத்திற்குள் மேலும் மூன்று உத்தயோகத்தர்களை நியமித்தல்.

(ஆ) சொத்து மெய்மையாய்வை மேற்கொண்டு கூடிய விரைவில் நிலையான சொத்துப் பதிவேட்டைத் தயாரித்தல்.

(இ) செலவிடப்படாத அரசாங்கத்தின் மூலதன மானியத்திலிருந்து அல்லது ஏனைய முதலீடாக வைக்கப்படாமை சரிசெய்யப்பட்டு அறிக்கையிடல்.

(ஈ) 2006 செப்தெம்பர் 30 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்திற்கு முரணாக ரூபா 38,530 தொகையான ஆரம்ப சம்பளத்தைவிட 10 சம்பள படிகள் முன் வைக்கப்பட்டு மாதத்திற்கு ரூபா 48,430 ஆக முன்னாள் முகாமைத்துவ பணிப்பாளருக்கு சம்பளம் வழங்கப்பட்டமையினால் மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 247,500 தொகையை மீள அவரிடமிருந்து அறவிடல்.

(உ) ரூபா 887,906 செலவில் நூலகக் கட்டிடத்தை அபிவிருத்தி செய்யும் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அது அமுல்படுத்தப்படாமையை கவனத்திற் கொண்டு 2013 ஆம் ஆண்டின் போது பாதீட்டில் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டு நூலகக் கட்டிடத்தை மீளத் திட்டமிடல்.

## 06. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்களின் பால் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஆ) கணக்கீடு

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) இருப்புக் கட்டுப்பாடு

(உ) முற்பணக் கட்டுப்பாடு

(ஊ) புத்தகக் கண்காட்சி மற்றும் விற்பனை

(எ) சபையின் வெளியீடுகளை அச்சிடல்

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)